தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.11.2013**

**ரூ.22.69 லட்சத்தில் விவசாய வண்டிகள்**

செங்கல்பட்டை அடுத்த திருப்போரூர் தொகுதியில் விவசாயிகளுக்கு ரூ.22.69 லட்சத்தில் அரசு மானியத்தில் பவர்டில்லர், டிராக்டர், பயிர் அறுவடை இயந்திரம் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 50 விவசாயிகளுக்கு ரூ.22.69 லட்சம் மதிப்பில் விவசாயத்துக்குத் தேவையான பவர்டில்லர், டிராக்டர், பயிர் அறுவடை இயந்திரம் ஆகியவைகள் 50 வழங்கப்பட்டது.

வேளாண்மைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் க.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செயற்பொறியாளர் பி.வி.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் ரங்கநாதன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

திருப்போரூர் எம்.எல்.ஏ. தண்டரை கே.மனோகரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு 50 பேருக்கு அரசு மானியத்தில் விவசாய வண்டிகள், இயந்திரக் கருவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மரகதம் குமரவேல், மானாமதி வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் ஏ.கே.கந்தசாமி, அவைத் தலைவர் ஆமூர் ஏழுமலை, தாழம்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் தேவசித்தன், வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் டி.டி.மோகன், சீனிவாசன், துணைத் தலைவர் விஜயரங்கன், குகானந்தம் உள்ளிட்டோர் கொண்டனர்.

**கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை திமுக ஆதரிக்கிறது: கருணாநிதி**



சர்க்கரை இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை திமுக முழுமனதுடன் ஆதரிக்கிறது என்று அந்தக் கட்சியின் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தில்லியில் டிசம்பர் 12-ஆம் தேதி கரும்பு விவசாயிகளின் பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடைபெற உள்ளது. இந்த ஆண்டு கரும்பு உற்பத்தி அதிகம் என்பதால் சர்க்கரை இறக்குமதிக்குத் தடை விதிக்க வேண்டும், கரும்பு விலையை உடனே நிர்ணயம் செய்ய வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கரும்பு விவசாயிகள் பேரணியில் ஈடுபடுகின்றனர். விவசாயிகளின் கோரிக்கைகளை திமுக முழு மனதோடு ஆதரிக்கிறது.

கால்நடைகளுக்கு கோமாரி நோய் வேகமாகப் பரவி வருகிறது. கடும் வெப்பத்துக்குப் பின் மழை பெய்யும்போது, உண்டாகும் வைரஸ் கிருமியால் கோமாரி நோய் கால்நடைகளைத் தாக்குகிறது.

தண்ணீர், காற்று மூலம் பரவும் இந்த நோயின் தாக்கம் 10 நாள்களுக்குப் பிறகுதான் வெளியில் தெரியும்.

கோவை, ஈரோடு, நாமக்கல், கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் ஏராளமான கால்நடைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்டு மடிந்துள்ளன. தமிழகம் முழுவதும் சுமார் ஒரு லட்சம் கால்நடைகள் இறந்துள்ளன. இது தொடர்பாக அரசின் கால்நடை துறை எடுத்த நடவடிக்கை என்ன? இனியேனும், கோமாரி நோய் பரவாமல் தடுக்க அரசு தீவிர முயற்சியில் ஈடுபட வேண்டும்.

இறந்த கால்நடைகளுக்கான இழப்பீட்டுத் தொகையை அரசு வழங்க வேண்டும்.

பள்ளிகளை மூடாதீர்: மாணவர் வருகை குறைவு என்று காரணம் கூறி, ஈராசிரியர் பள்ளிகளை ஓராசிரியர் பள்ளிகளாகவும், ஓராசிரியர் பள்ளிகளை அறவே மூடிவிடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பள்ளி மூடல் தொடர்பாக அரசாணை வெளியிட்டால் பெரும் எதிர்ப்பு வரும் என்பதால், அரசு வாய்மொழி உத்தரவிட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். எனவே, அரசு இந்த நடவடிக்கையை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

**தாட்கோ திட்டத்தின்கீழ் ரூ.59 லட்சம் கடனுதவி**

உதகையில் தாட்கோ திட்டத்தின்கீழ் ரூ.59 லட்சம் கடனுதவியை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் வழங்கினார்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் திங்கள்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, வங்கிக் கடன் உதவி, குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி பொதுமக்கள் மனு அளித்தனர். இம்மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தின் சார்பில் 2013-ஆம் கல்வியாண்டில் 10, 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் மாவட்ட அளவில் சிறப்பிடம் பிடித்த வினித்குமார், கிஷோர், கோவர்த்தினி, நந்தகுமார், ஆசிஷ், அப்சானா ஆகியோருக்கு தலா ரூ.3,000 வீதம் ரூ.18,000 ரொக்கப் பரிசினை ஆட்சியர் பி.சங்கர் வழங்கினார்.

மேலும், தாட்கோ திட்டத்தின்கீழ் 12 பயனாளிகளுக்கு கேபிள் டிவி, கடை, வாகனம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை தொடங்குவதற்காக ரூ.15.75 லட்சம்

மானியத்துடன் மொத்தம் ரூ.59 லட்சம் மதிப்பிலான கடன் உதவிக்கான காசோலைகளையும் அவர் வழங்கினார்.

அதைத்தொடர்ந்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் சார்பில் உதகையில் பிங்கர்போஸ்ட் பகுதியைச் சேர்ந்த பிரதீப் என்பவருக்கு கண் கண்ணாடி, மடக்கு குச்சி உள்ளிட்டவற்றை வழங்கியதோடு, மாற்றுத்திறனாளிகளுக்கு வழிகாட்டும் திட்டத்தில் நலப் பணியாளர்கள் 105 பேருக்கு மாதம் ரூ.750 வீதம் 12 மாதங்களுக்கு மொத்தம் ரூ.9.45 லட்சமும், ஒருங்கிணைப்பாளர்கள் 8 பேருக்கு மாதம் ரூ.2,000 வீதம் 12 மாதங்களுக்கு ரூ.1.92 லட்சமுமாக மொத்தம் 113 களப் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.11.37 லட்சம் ஊதியத்துடன் நிறுவனத்திற்கான நிர்வாக தொகை ரூ.33,900-மும் சேர்த்து மொத்தம் ரூ.11 லட்சத்து 8,000-க்கான காசோலையை இத்திட்டத்தை செயல்படுத்தும் தொண்டு நிறுவனமான சி.டி.ஆர்.டி. நிறுவனத்திற்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் இல.நிர்மல்ராஜ், சமூக பாதுகாப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் எம்.மோகனராஜன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தப்படும்**

கெயில் நிறுவனத்திற்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ள நிலையில் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தப்படும் என கொங்குநாடு முன்னேற்றக் கழகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜி.கே.நாகராஜ் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி: தமிழகத்தில் 310 கி.மீ. தொலைவிற்கு விவசாய நிலத்தின் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் பணியை கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு கெயில் நிறுவனம் தொடங்கியது. இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் உயர் நீதிமன்ற தீர்ப்புபடி விவசாயிகளின் கருத்தைப் பதிவு செய்த தமிழக அரசு, விவசாயிகளுக்கு ஆதரவளித்தது. ஆனால் கெயில் நிறுவனம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இவ்வழக்கில் கெயில் நிறுவனத்திற்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் திங்கள்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 5 லட்சம் விவசாயிகள் பாதிக்கப்படுவர். 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும்.

தென்மாவட்டங்களில் எரிவாயு குழாய் மற்றும் எண்ணெய் குழாய் பதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு நிவாரணம் வழங்கியுள்ளது. வீடுகள், பல ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட தென்னை மரங்கள், ஆழ்குழாய் கிணறுகளை அழித்துவிட்டு சொற்ப அளவில் நிவாரணம் கொடுத்தன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி ஆகியுள்ளது.

கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் தேசிய நெடுஞ்சாலை வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் தமிழகத்தில் மட்டும் விவசாய நிலங்கள் வழியாக கொண்டு செல்வதன் காரணம் என்ன?

இவ்வழக்கில் தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

மேலும் விவசாயிகளை ஒன்றுதிரட்டி, பாதிக்கப்பட்ட விவசாயிகளை காப்பாற்ற கொங்குநாடு முன்னேற்றக் கழகம் சார்பில் போராட்டங்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டுப்பாளையத்தில் 23 கிராம விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளை பாதுகாக்கத்  தவறியதாக வனத்துறையை கண்டித்தும், விவசாயிகளுக்கு உரிய இழப்பீடும், பாதுகாப்பும் வழங்க அரசை வலியுறுத்தியும் தேக்கம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள 23 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மேட்டுப்பாளையத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தேக்கம்பட்டி 23 கிராம விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு, நீர் நிலைகள்-சுற்றுச்சூழல்  பொதுநல இயக்கம், காரமடை வட்டார சமூகநல அமைப்புகள் சார்பில் மேட்டு ப்பாளையம் நகர பேருந்து நிலையம் முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் டி.பாண்டுரங்கன் தலைமை வகித்தார். கிராம விவசாய சங்கத் தலைவர்கள் திப்பையன், சுப்பைய கவுடர், கிருஷ்ணமூர்த்தி, குமாரசாமி, தங்கவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைப்புக் குழு செயலர் ரங்கராஜ் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து, பாண்டுரங்கன் பேசியது:

காட்டு யானைகளின் அட்டகாசத்தை தடுக்க வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் மூலம் வனத்துறையினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு, பாதுகாப்பு வழங்கவும், நெல்லிமலை பகுதியில் சுற்றித்திரியும் காட்டு யானைகளை கும்கி மூலம் வனப்பகுதிக்குள் விரட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண ஆட்சியர் தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

அடுத்த கட்டமாக 23 கிராம விவசாயிகளின் குடும்பத்தினர் சார்பில் மேட்டுப்பாளையத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

இதில் கிராம விவசாய பிரதிநிதிகள் நெல்லித்துறை கண்ணப்பன், பன்னீர்செல்வம், ஊர் கவுடர் ராஜன், சிவராமன் உள்பட தாசனூர், குறும்பனூர், கிட்டாம்பாளையம், தொட்டதாசனூர், பஞ்சுக்காடு, தேக்கம்பட்டி மற்றும் சுற்றியுள்ள 23 கிராமங்களை சேர்ந்த 700-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விவசாய ஒருங்கிணைப்புக் குழு சார்பில் திராவிடமணி நன்றி கூறினார்.

**சிறு குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள்**

சிறு குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் மற்றும் உயிர் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்று ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

ஆரணி வட்டார வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை வேளாண்மை உதவி இயக்க்குநர் வே.சத்தியமூர்த்தி ஆய்வு செய்தார். அப்போது

செய்தியாளர்களிடம் கூறியதாவது: தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை துறையின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள், உயிர் உரம், பூச்சி நோய் கட்டுப்பாடு மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை சமாளித்து நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு பைப்லைன், மணிலா பயறு போன்றவற்றை மானியத்தில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டங்களில் பண்ணைக் குட்டை விவசாயிகளுக்கு நீர் ஆதாரங்களை அதிகப்படுத்துவதற்காக வேளாண்மை துறை மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் முழு மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் துவரை சாகுபடி, நடவு முறையில் ரூ.7500 ஹெக்டேர் அரசு விதிமுறையின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆரணி வட்டாரத்தில் உள்ள எஸ்.யு.வனம் கிராமத்தில் பண்ணைக் குட்டை ஆய்வு செய்யப்பட்டது என்றார். ஆரணி வேளாண்மை அலுவலர் பா.கார்த்தியாயினி, சிறுமூர் உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தினர் ராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு ரூ.148 கூலி வழங்க வேண்டும். ஒரு நபருக்கு ஆண்டுதோறும் 200 நாள் வேலை வழங்கிட வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பேரூராட்சிப் பகுதிக்கும், விவசாயப் பணிக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

ராசிபுரம் அருகேயுள்ள மலையாம்பாளையம் கிராமத்தில் இலவச வீட்டுமனை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும். கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களை வறுமைக் கோடு பட்டியலில் சேர்க்க வேண்டும். கிராமப்புறங்களில் பொதுக் கழிப்பிடம், மருத்துவ வசதி போன்ற

அடிப்படை வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்ட அமைப்பாளர் பி.கணேசன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் ஏ.சந்திரமோகன், மாவட்ட செயலர் ஆர்.வேல்முருகன், கம்யூனிஸ்ட் (லெனின்) அத்தனூர் கிளைச் செயலர் கே.விஜயன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**முட்டை விலை முதல் முறையாக ரூ. 4-க்கு மேலாக உயர்வு**

நாமக்கல் மண்டல வரலாற்றில் முதல் முறையாக முட்டை பண்ணைக் கொள்முதல் விலை திங்கள்கிழமை ரூ.4-க்கு மேலாக உயர்ந்தது.

வட மாநிலங்களில் உயர்ந்து வரும் முட்டை விலை காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை கொள்முதல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மும்பை, தில்லி, கொல்கத்தா, பர்வாலா உள்ளிட்ட மண்டலங்களில் முட்டை நுகர்வு வேகமாக உயர்ந்து வருகிறது. தவிர, புரட்டாசி மாதம் முடிந்ததை அடுத்து முட்டை நுகர்வு அதிகரித்ததன் காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை பண்ணைக் கொள்முதல் விலையும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வந்தது.

இதன்படி, கடந்த அக்டோபர் 28-ஆம் தேதி ரூ.3.61ஆக இருந்த முட்டை விலை, நவம்பர் 2-இல் ரூ.3.70, நவம்பர் 7-இல் ரூ.3.76, 11-இல் ரூ.3.81 என உயர்ந்து, நவம்பர் 12-ஆம் தேதி வரலாறு காணாத விலையேற்றமாக ரூ.3.90ஐ அடைந்தது. இதன்பிறகு, நவம்பர் 14-ஆம் தேதி ரூ.3.96, நவம்பர் 23-இல் ரூ.3.98ஆக உயர்ந்து திங்கள்கிழமை முதல் முறையாக ரூ.4.03ஆக அதிகரித்தது.

வட மாநிலங்களில் முட்டை நுகர்வு அதிகரித்து விலையும் உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டல முட்டை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அலுவலர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறியது: கார்த்திகை மாதம் காரணமாக சபரிமலை திருவிழா தொடங்கியிருப்பதால் தமிழகம், கேரள மாநிலங்களில் பரவலாக முட்டை நுகர்வு 20 சதம் வரை சரிந்துள்ளது. எனினும், வட மாநிலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டல விலையும் உயர்த்தப்பட்டு வருகிறது.

தீவன மூலப்பொருள்களின் விலையேற்றத்தை ஒப்பிடுகையில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலையின் இந்த உயர்வு அவசியமாகிறது என்றனர் அவர்கள்.

முட்டை விலை அதிகரித்து வருவது பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதைத்தொடர்ந்து, பண்ணைகளில் உள்ள முட்டைகளை வேகமாக சந்தைக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**தருமபுரியில் 29-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரியில் வருகிற 29-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருகிற 29-ஆம் தேதி காலை 11 மணியளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை துறை உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

எனவே, மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகள் மற்றும் புகார்களைத் தெரிவித்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேய்பிறை அஷ்டமி: கால பைரவர் கோயிலில் சிறப்பு வழிபாடுதருமபுரி, நவ.25: தேய்பிறை அஷ்டமியையொட்டி அதியமான்கோட்டை கால பைரவர் கோயிலில் திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த ஸ்ரீ தட்சண கால பைரவர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் தேய்பிறை அஷ்டமியையொட்டி திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

முன்னதாக, மஹா கணபதி ஹோமம், அஷ்டபைரவ ஹோமம், கோ பூஜை, மஹா பூரணஹிதி மற்றும் மஹா அபிஷேகம் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு பைரவர் அருள் பாலித்தார். இதையொட்டி, பக்தர்கள் சாம்பல் பூசணியில் விளக்கேற்றி வழிபட்டனர்.

இதில், தருமபுரி, சேலம், பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கால பைரவரை வழிபட்டனர். பக்தர்கள் வருகையொட்டி அதியமான்கோட்டை போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

**குடவாசலில் 25.20 மி.மீ. மழை**

குடவாசலில் ஞாயிற்றுக்கிழமை 25.20 மில்லி மீட்டர் மழைப் பதிவானது.

திருவாரூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: திருவாரூர் - 22.60,திருத்து றைப்பூண்டி - 18.60, முத்துப்பேட்டை - 17.40, மன்னார்குடி - 15, நீடாமங்கலம் - 13.40, நன்னிலம் - 10.90, வலங்கைமான் - 9.20, பாண்டவையாறு தலைப்பு - 6.80.

**பயிர் காப்பீடு இழப்பீட்டு நிலுவைத் தொகை வழங்கப்படுவது எப்போது?**

காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பயிர்க் காப்பீடு இழப்பீட்டு நிலுவைத் தொகை எப்போது வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

காவிரியில் தமிழகத்துக்கான நீரை கர்நாடகம் தொடர்ந்து தர மறுத்ததாலும், பருவமழை பொய்த்ததாலும் காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த ஆண்டு சம்பா சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, தமிழக அரசு சார்பில் நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சரவை குழுவும், அதிகாரிகள் குழுவினரும், மத்திய அரசு சார்பில் வல்லுநர் குழுவும் மாவட்டங்களை பார்வையிட்டு மாநில, மத்திய அரசுகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதன்படி, பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு மாநில அரசு சார்பில் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் என்று நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டது. இதில் நிர்வாக குளறுபடியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை முழுமையாக வழங்கப்படாமல், சொற்ப தொகையே வழங்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இதுவரையில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை. மத்திய அரசின் சார்பில் பயிர் காப்பீட்டுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படாததே இதற்கு காரணம் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தியா முழுவதும் காரீப், ராஃபி முறையை கணக்கிட்டு பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்கப்படுவதால், காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு நிவாரணம் சாகுபடி காலத்தில் கிடைக்காத நிலை உள்ளது.

நாடு முழுவதும் ஜூன் மாதத்திற்கு பிறகே பயிர்க் காப்பீடு குறித்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதால், டிசம்பர் மாதம்தான் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் நிலை உள்ளது.

தமிழகத்தில் டெல்டா பகுதி விவசாயத்திற்கும், மற்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் விவசாயத்திற்கும் பொருந்தாத நிலை உள்ளது. இதுகுறித்து நாகை எம்.பி. ஏ.கே.எஸ். விஜயன் கூறியது:

கடந்த ஆண்டு கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடனையே திரும்ப செலுத்த சக்தியற்ற நிலையில் பயிர்க் காப்பீடுக்கான

இழப்பீட்டுத் தொகை நவம்பர் மாதம் வழக்கம் போல வழங்கப்படும் என்று காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சி உள்ளது. டிசம்பர் மாதத்துக்குள்ளாவது இந்தத் தொகை கிடைக்கச் செய்ய வேண்டும். மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்க முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**பயிர் இழப்பீடு வழங்க வலியுறுத்திவிவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி தஞ்சாவூர் அருகேயுள்ள நடுக்காவிரி வருவாய் ஆய்வாளர் அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பு) திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். தமிழக அரசின் பங்குத் தொகை அளிக்க வேண்டும் என முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்துக்கு அம்பலராசு தலைமை வகித்தார்.

சங்கத்தின் மாவட்டச் செயலர் சாமி. நடராசன் கண்டன உரையாற்றினார். இதில், ஒன்றியச் செயலர் எம். ராம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி கள்ளப்பெரம்பூர் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்குச் சங்கத்தின் ஒன்றியத் தலைவர் எஸ். ஞானமாணிக்கம் தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் கே. காமராஜ் கண்டன உரையாற்றினார். ஒன்றியச் செயலர் செய்ந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மதுக்கூரில் 15.6 மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக மதுக்கூரில் 15.6 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): மதுக்கூரில் 15.6, மஞ்சலாறு 14.2, அணைக்கரை 11.6, கும்பகோணம் 11.2, திருவிடைமருத்தூர் 11.1, ஈச்சன்விடுதி 10.2, நெய்வாசல் தென்பாதி 8.2, பட்டுக்கோட்டை, பேராவூரணி தலா 8, அதிராம்பட்டினம் 7.3, ஒரத்தநாடு 6.4, அய்யம்பேட்டை, பாபநாசம் தலா 6,

கல்லணை 5.6, வெட்டிக்காடு 5, தஞ்சாவூர் 4.2, குருங்குளம் 4, திருவையாறு 3, பூதலூர் 1.2.

**கோமாரி நோய் பாதித்த கால்நடைகளுக்கு சிகிச்சை**

ஆலங்குடி பகுதியில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதையும் மற்றும் நோய் அறிகுறி உள்ள கால்டைகளையும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் ஆர். பழனிசுவாமி சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, அரசடிப்பட்டி, கீழாத்தூர் ஊராட்சியில் வெள்ளாக்குளம், சூரன்விடுதி கிராமங்களிலும், கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவக் குழுவினரால் தீவிர சிகிச்சை அளிக்கப்படுவதையும், கோமாரி நோய் மற்ற கால்நடைகளுக்கு பரவாமல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதையும், இந்தப் பகுதிகளில் கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டு வருவகையும் பார்வையிட்டார்.

மேலும், நெம்மக்கோட்டை, சிக்கப்பட்டி, மேலாத்தூர், மாஞ்சான்விடுதி, வல்லத்திராகோட்டை, பூவரசகுடி, வாண்டாக்கோட்டை, ஆலங்காடு, அணவயல், எல்.என். புரம் ஆகிய கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டு கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்தியது குறித்தும், சுற்றுப்புறத்தை பிளீச்சிங் பவுடர் தெளித்து சுகாதாரமாக பராமரிக்குமாறும், கோமாரி நோய் அறிகுறி தெரிந்தவுடன் மற்ற கால்நடைகளை தனியாகப் பிரித்து பாதுகாக்குமாறும், கால்நடைகளுக்கு உணவாக வைக்கோல் தரக்கூடாது புல் மற்றும் கேழ்வரகு கஞ்சி தரவேண்டும் எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதேபோல், மருத்துவக் குழுவினருக்கு வருவாய்த்துறை அலுவலர்களும் பொதுமக்கள் ஒத்துழைப்புத்தந்து தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன், கோட்டாட்சியர் ஆர். ராஜாராமன், கால்நடைத்துறை இணை இயக்குநர் டாக்டர் மகாலிங்கம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) எல். பாலன், மண்டல கால்நடை ஆராய்ச்சி மைய

தலைவர் மற்றும் பேராசிரியர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன், தஞ்சாவூர் கால்டை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் நெடுஞ்செழியன், வட்டாட்சியர் கோவிந்தராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகம்மை, செல்வராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தென்னை மர நண்பர்களுக்கான பயிற்சி முகாம் நிறைவு விழா**

புதுக்கோட்டை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், கொச்சின் தென்னை வளர்ச்சி வாரியமும் இணைந்து நடத்திய தென்னை மர நண்பர்களுக்கான பயிற்சி முகாம் நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் அலுவலகக் கூட்ட அறையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலர் எஸ். சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

வேளாண் துறை இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் பயிற்சி முடித்த அனைவருக்கும் தென்னை மரம் ஏறும் கருவிகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பேசியது:

தற்போதைய கால சூழலுக்கு ஏற்ற பயிற்சியாகும்.

தென்னை மரங்களில் ஏறுவதற்கு வேலையாட்கள் பற்றாக்குறையாக இருக்கும் காலச் சூழ்நிலையை சமாளிக்க இப்பயிற்சி மிகவும் உதவியாக அமையும்.

மேலும், தென்னைமரம் ஏறும் பயிற்சி பெற்ற அனைவரையும் ஒரு குழுவாக அமைத்து தென்னை ஏறும் கருவிகளை கொண்டு மரம் ஏறுவதை ஒரு சுயதொழிலாக மாற்ற எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் முயற்சிக்க வேண்டும். பெண்களும் தென்னைமரம் ஏறும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தது பெருமைக்குரியது என்றார்.

இதில், பேலஸ் சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் கே. மோகன்ராஜ், வேளாண் அலுவலர் ஆர். ஜெகதீஸ்வரி, கவிஞர் ரமாராமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

6 நாட்கள் நடைபெற்ற பயிற்சியில் வம்பன் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆர்.பி. ஞானமலர், வி. கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பேராசிரியர் ஜடாக்கவிதா, நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் கே. சதாசிவம், வேளாண் அலுவலர் சந்தானம், தென்னை வளர்ச்சி நிறுவன பயிற்சியாளர்கள் ஆர். திருமலைச்சாமி, டி. ராஜேந்திரன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளித்தனர்.

முன்னதாக, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் வரவேற்றார். நிறைவில் இணைத் திட்ட அலுவலர் கே. பாரதிதாசன் நன்றி கூறினார்.

**அறந்தாங்கியில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

அறந்தாங்கி அருகேயுள்ள ஆவுடையார்கோவிலில் விவசாயிகள் சங்கம் மற்றும் பில்லுவலசை கிராம மக்கள் சார்பில் திங்கள்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பில்லுவலசை கிராமத்தில் இயங்கி வரும் இறால் பண்ணையால் பொதுமக்களுக்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும், பொதுப்பணித்துறை கண்மாய் அருகில் ஆழ்குழாய் கிணறு மூலம் தண்ணீர் எடுப்பதை நிறுத்த வேண்டும் எனவும், இறால் பண்ணையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் கொழுவன் ஆற்றில் கலப்பதால் குடிநீர் மாசுபட்டு, பொதுமக்களும், கால்நடைகளும் பாதிக்கப்படுவதாகவும் கூறி வருவாய்த்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு விவசாய சங்க ஒன்றியச் செயலர் சேவுகப் பெருமாள் தலைமை வகித்தார். நீர்ப்பாசன சங்கத் தலைவர் மகாலிங்கம், விவசாய சங்க ஒன்றியத் தலைவர் மணி, கிளைச் செயலர் சித்திரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட விவசாய சங்க மாவட்டச் செயலர் மு. மாதவன் ஆர்ப்பாட்டத்தை தொடக்கிவைத்தார். மாவட்டப் பொருளாளர் காளிமுத்து, அறந்தாங்கி ஒன்றியச் செயலர் ஆ. ராஜேந்திரன், ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலர்

சரவணபெருமாள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் ஜெபமாலைபிச்சை, தூயவன், சித்ரா உள்ளிட்டோர் கலநதுகொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த. செங்கோடன், ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்துப் பேசினார்.

**நவ. 29 -ல் வம்பனில் திருந்திய நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

புதுக்கோட்டை அருகே வம்பன் வேளாண் அலுவலத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி வெள்ளிக்கிழமை (நவ. 29) நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வெளியிட்ட தகவல்:

வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் பயிற்சியை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு, 80980 79625 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் இல்லை**

தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் இல்லை என சுகாதாரத் துறை அதிகாரிகள் ஆய்வில் தெரியவந்துள்ளது என்றார் ஆட்சியர் ம. ரவிக்குமார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்துக்குப் பிறகு ஆட்சியர் ம. ரவிக்குமார் அளித்த பேட்டி:

தமிழகத்தில் சில மாவட்டங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் இருந்த நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை மருத்துவர்கள், சுகாதாரத் துறையினர் அடங்கிய குழுவினர் வீடுவீடாகச் சென்று பரிசோதனை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனையின்போது, தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் இல்லை என தெரியவந்துள்ளது. மேலும், எட்டயபுரம், விளாத்திகுளம் பகுதிகளில் நடைபெறும் ஆடு, மாடு சந்தைகளுக்கு வெளி

மாவட்டத்திலிருந்து கொண்டுவரப்படும் ஆடு, மாடுகள் பரிசோதனைக்குப் பிறகே விற்பனைக்கு அனுமதிக்கப்படும்.

மணப்பாடு கிராமத்தில் இருபிரிவினருக்கிடையே ஏற்பட்ட மோதலுக்கு சமாதானக் கூட்டத்தில் சுமூக தீர்வு ஏற்பட்டுள்ளபோதிலும் மனதளவில் இன்னும் அவர்கள் தயாராகவில்லை. தூத்துக்குடியில் போராட்டம் நடத்தி வரும் விசைப்படகு உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. மீனவர்கள் ஓரிரு நாள்களுக்குள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வாய்ப்பு உள்ளது என்றார்.

தொடர்ந்து, பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற சிறுபான்மை மாணவர், மாணவிகளுக்கு பரிசுகளை ஆட்சியர் ம. ரவிக்குமார் வழங்கினார்.

**தேங்காயைத் தொடர்ந்துபிண்ணாக்கு விலையும் அதிகரிப்பு: மாடு வளர்ப்போர் கடும் பாதிப்பு**

குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை உயர்வைத் தொடர்ந்து பிண்ணாக்கின் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் மாடு வளர்க்கும் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குமரி மாவட்டத்தில் நிகழாண்டு ஜூன் மாதம் வரை நிலவிய கடும் வறட்சி காரணமாக ஏற்பட்ட உற்பத்திக் குறைவு, வெளிநாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி அதிகரிப்பு, கொப்பரையின் தேவை அதிகரிப்பு உள்ளிட்டக் காரணங்களால் தேங்காய் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது சந்தைகளில் ஒரு கிலோ தேங்காய் ரூ. 30-க்கும் அதிகமாக விற்பனையாகிறது. விலை அதிகரித்தபோதும் விவசாயிகளின் கையிருப்பில் தேங்காய் இல்லாததால் அவர்களுக்கு அதிக பயன் ஏற்படவில்லை. ஆனால் தேங்காயை அதிகம் சமையலுக்குப் பயன்படுத்தும் குமரி மாவட்ட மக்கள், குறிப்பாக தென்னை மரங்கள் இல்லாத மக்களுக்கு இது கூடுதல் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தியுள்ளது.

பிண்ணாக்கு விலை உயர்வு: தேங்காய் உற்பத்திக் குறைந்து கொப்பரைக்கு தட்டுப்பாடு நிலவும் வேளையில் தேங்காய் பிண்ணாக்கின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை பல்பொருள் விற்பனைக் கடைகளில் 44 கிலோ கொண்ட ஒரு மூட்டை தேங்காய்ப் பிண்ணாக்கை ரூ. 1900 வரை கொடுத்து கொள்முதல் செய்தனர்.

இதனால் இப் பிண்ணாக்கின் சில்லைறை விலை ரூ. 45- க்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. பிண்ணாக்கின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் கறவை மாடு வைத்திருக்கும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து குலசேகரத்தில் முன்னோடி கறவை மாடு விவசாயி ஒருவர் கூறியதாவது.

கறவை மாடுகளை வளர்ப்பது நாளுக்கு நாள் பெரும் சுமையாக உள்ளது. தற்போதுள்ள உயர்ரக மாடுகளை வெளிப் பகுதியில் மேய்ச்சலுக்கு விடமுடியாத நிலை உள்ளது. மாடுகளுக்குத் தேவையான அனைத்து தீனிகளையும் கடைகள் மற்றும் சந்தைகளிலிருந்துதான் வாங்கவேண்டியுள்ளது. குறிப்பாக புல்கட்டு இப்போது சந்தைகளில் கிடைப்பது அரிதாக உள்ளது. இதனால் பிண்ணாக்கு போன்ற தீனிகளையே அதிகமாகக் கொடுக்க வேண்டியுள்ளது.

பிண்ணாக்கின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து, அரிசி விலையைவிட அதிகமாகச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் பால் விலை அதிகரிக்கவில்லை. அத்துடன் சாணத்திற்கும் அதிக விலை கிடைக்கவில்லை. சாணத்தின் விலையை விட அதை எடுத்துச் செல்லும் செலவுதான் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் கறவை மாடு வைத்திருக்கும் விவசாயிகள் உள்பட கால்நடைகள் வளர்ப்போர் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர் என்றார் அவர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் குந்தகம் விளைவித்த செயலுக்கு கண்டனம்**

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் அவை நடவடிக்கைக்கு குந்தகம் விளைவித்த செயலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு அனந்தனாறு பிரதான வாய்க்கால் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் நிர்வாகிகள் பி. செண்பக சேகரன்பிள்ளை, பழனியாபிள்ளை, ஏ. சண்முகம்பிள்ளை, முஸ்தபா, எஸ். முத்தையா ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை:

நாகர்கோவிலில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், விவசாயிகள் அல்லாதவர்கள் கலந்து கொண்டு தேவையில்லாத பிரச்னையை எழுப்பி, கூட்ட நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்திய செயல் கண்டனத்திற்குரியது.

சுயவிளம்பரத்துக்காக அவையில் நாகரீகம் இல்லாமல் நடந்த பொன்னுலிங்க ஐயன் செயல்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இனிவரும் கூட்டங்களில் உண்மையான விவசாயிகள் மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் மட்டும் கலந்து கொள்ளும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராஜாக்கமங்கலம் கிளை கால்வாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்க தலைவர் டி. தேவதாஸ் கூறியுள்ளதாவது: வேளாண்மை துறை மூலம் உண்மையான விவசாயிகள், விவசாய அமைப்புகள், பாசன சங்கங்களைச் சேர்ந்தவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மட்டும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பங்கேற்கச் செய்ய வேண்டும். இதன்மூலம் அவை நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படாமல் தடுக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

**ரப்பர் விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ. 135 ஆக குறைந்தது**

குமரி மாவட்டத்தில் ரப்பர் விலை, கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் சரிவடைந்துள்ளதால் ரப்பர் விவசாயிகள் கவலைக்குள்ளாகியுள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் ரப்பர் பால் வெட்டுத் தொழில் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் ரப்பர் உற்பத்தியும் முடங்கியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத சரிவு: இந்திய ரப்பர் சந்தையில் கடந்த ஒரு மாதமாக ரப்பர் விலை தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. கடந்த மாதத்துக்கு முன்பு வரை கிலோ ரூ. 175 என்ற அளவில் இருந்த ரப்பர் விலை, தற்போது கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெகுவாகச் சரிந்துள்ளது. திங்கள்கிழமை கோட்டயம் சந்தையில் ரப்பரின் விலை கிலோ ரூ. 135.50 ஆக குறைந்தது.

கேரளா மற்றும் குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ரப்பரின் விலை தொடர்ந்து சரிந்து வருவது விவசாயிகளை கவலைக்குள்ளாக்கியுள்ளது. மேலும் விலை சரியக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்

**விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

விழுப்புரம் அருகே உள்ள கிராமங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்க வலியுறுத்தி அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் மற்றும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் பழைய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வட்ட அமைப்பாளர் கண்ணம்மாள் தலைமை வகித்தார். சிபிஐ-எம்.எல் மாவட்டச் செயலர் எம்.வெங்கடேசன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாவட்டச் செயலர் ஏ.செண்பகவள்ளி ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்றனர்.

கன்டம்பாக்கம், வழுதரெட்டி, ஒட்டன்காடுவெட்டி, சிந்தாமணி, தளவானூர் ஆகிய கிராமங்களில் வீட்டுமனைப் பட்டா, விலையில்லா பொருள்களான மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, முதியோர் விதவைத் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை உள்ளிட்டவைகள் வழங்கக் கோரி கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.லோகநாதன், ஏஐசிசிடியூ மாவட்ட அமைப்பாளர் என்.கணேசன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**தொடர்மழை பெய்தும் நிரம்பாத மணிமுக்தா அணை**

விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்மழை பெய்தும் மணிமுக்தா அணை நிரம்பாத நிலையில்உள்ளது. அணை நிரம்பாததற்கு நீர்வரத்துக் கால்வாய்களை பராமரிக்காததே காரணம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கல்வராயன் மலைப் பகுதியில் எட்டி நீர்வீழ்ச்சியில் மணிநதி உற்பத்தியாகி வடபாலப்பட்டு, புதுப்பாலப்பட்டு, அரசம்பட்டு, பூட்டை, எஸ்.வி.பாளையம்,

சங்கராபுரம், தேவபாண்டலம், பரமநத்தம், பிச்சநத்தம் வழியாக மணிமுக்தா அணைக்கு வருகிறது.

அதேபோல, கல்வராயன் மலை அடிவாரத்தில் துரூர் கருமந்துரை பகுதியில் உற்பத்தியாகும் முத்தாறு, செல்லம்பட்டு, தாவடிப்பட்டு, சோழம்பட்டு, மூரார்பாளையம், பரமநத்தம், பிச்சநத்தம் வழியாக மணிமுக்தா அணைக்கு வருகிறது.

இவை மேற்கண்ட பரமநத்தம், பிச்சநத்தம் பகுதிகளுக்கு இடையில் ஒன்று சேர்ந்து மணிமுத்தாறாக சூளாங்குறிச்சியில் உள்ள மணிமுக்தா அணையை நிரப்பிக் கொண்டு, விருத்தாசலம் வழியாக கடலூருக்கு அருகில் கடலில் கலக்கிறது.

ரிஷிவந்தியம் ஒன்றியத்துக்கு உள்பட்ட சூளாங்குறிச்சி கிராம எல்லையில் மணிமுக்தா அணை 1966-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1970-ம் ஆண்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த அணையின் மொத்த நீர்மட்டம் 36 அடி ஆகும். மொத்த நீர்ப்பிடிப்பு பரப்பளவு 1,820 ஏக்கர் ஆகும். ஆண்டுதோறும் தண்ணீர் நிரம்பும் இந்த அணையில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். இந்தாண்டு இந்த அணை நிரம்பவில்லை.

தற்போதைய நிலவரப்படி அணை நீர்மட்டம் 20 அடியாக உள்ளது.

தொடர்மழை பெய்தும் இந்த அணை நிரம்பாததற்குக் காரணம், மூரார்பாளையத்தில் இருந்து பரமநத்தம் வழியாக பழைய சிறுவங்கூர் செல்லும் சாலையையொட்டி, கண்ணுக்கு எட்டிய தூரம் இந்த அணையை ஆக்கிரமித்து சிலர் விவசாயம் செய்து வருகின்றனர். மேலும், நீர்வரத்துக் கால்வாய்களும் ஆங்காங்கே ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

எனவே, மணிமுத்தாறைக் கொண்டு கடைக்கோடி வரை உள்ள அனைத்து மக்களும் தொடர்ந்து பயன்பெறும் வகையில், இந்த அணை ஆக்கிரமிப்பு மற்றும் நீர்வரத்துக் கால்வாய்கள் ஆக்கிரமிப்பை அகற்றிட மாவட்ட நிர்வாகம் முனைப்பு காட்ட வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு.

**29-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விழுப்புரத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் நவம்பர் 29ஆம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட அறிக்கை: விழுப்புரம் மாவட்டத்தில் நவம்பர் 2013-க்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 29ஆம் தேதி நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் பங்கேற்று கோரிக்கைகளை மனுவாக அளித்துப் பயனடையலாம் என்றார்.

**கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு:நாம் தமிழர் கட்சி கோரிக்கை**

புதுவையில் கால்நடைகளை கோமாரி நோய் தாக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியினர் திங்கள்கிழமை அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை வைத்தனர்.

புதுவை மாநில நாம் தமிழர் கட்சியின் மாநில செயலாளர் இரா.வேல்சாமி தலைமையிலான கட்சியினர், திங்கள்கிழமை கால்நடைத் துறை அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு கால்நடைத் துறை இயக்குநரை சந்தித்த அவர்கள், தமிழகத்தைப் போல, கால்நடைகளை கோமாரி நோய் தாக்காமல் பாதுகாக்க வேண்டும். இதற்காக தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். நோய் தாக்கம் குறித்து விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

இதேபோல, புதுவை நகராட்சி கால்நடைத் துறை மருத்துவரிடமும் அவர்கள் கோரிக்கை வைத்து மனு கொடுத்தனர். மாநில செயலாளர் இளங்கோ, கொள்கை விளக்கப் பாசறை செயலர் வெ.கார்த்திகேயன், தொழிற்சங்கத் தலைவர் ரமேஷ், செயலாளர் செல்வராசு உள்ளிட்ட கட்சியினர் பலர் கலந்து கொண்டனர். அரசு சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அவர்களிடம் தெரிவித்தனர்.

**பயிர் காப்பீடு கோரி மறியல்: 110 விவசாயிகள் கைது**

காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தி சிதம்பரம் அருகே உள்ள குமராட்சியில் மறியலில் ஈடுபட்ட விவசாயிகள் 110 பேரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு தமிழகஅரசே காப்பீடு தொகையைச் செலுத்தியது. இதில் 50 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், 50 சதவீதத்துக்கு கீழ் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு பயிர் காப்பீடு மூலம் இழப்பீடு வழங்கப்படும் எனவும் தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்தார். ஆனால் காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 1109 ஹெக்டேர் நிலங்களுக்கு மட்டும் ரூ.15 ஆயிரம் வீதம் காப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது காட்டுமன்னார்கோவில் வட்டம் குமராட்சி பகுதிக்கு ரூ.4 லட்சத்துக்குக் குறைவான தொகையை விவசாயிகளுக்கு பயிர் காப்பீடுத் தொகை வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு இழப்பீடுத் தொகையை வழங்க வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் மறியலில் ஈடுபட்டனர்.

கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தலைமையில் கென்னடி, மதிவாணன், அன்பழகன், லட்சுமிகாந்தன் ஆகியோர் முன்னிலையில் விவசாயிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் குமராட்சி கடைவீதியிலிருந்து ஊர்வலமாகச் சென்று வேளாண்மை அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்ட விவசாயிகள் 110 பேரை

குமராட்சி போலீஸார் கைது செய்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 26.11.2013

### கோமாரி நோய் தடுப்பு ஆலோசனை கூட்டம்

தர்மபுரி: தர்மபுரியில், கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் நோயை கட்டுப்படுத்துதல் தொடர்பான ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதில், கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது:

கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளை கால்நடை மருத்துவர்கள் கண்டறிந்து, உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும். மேலும் நோய் பாதிக்காத கால்நடைகளை கண்டறிந்து தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்ள வேண்டும். அனைத்து பஞ்சாயத்துக்களிலும் ப்ளீச்சிங் பவுடர் ,சோடியம் கார்பனேட் மற்றும் சோடியம் போன்ற மருந்து பொருட்களை இருப்பு வைக்க வேண்டும். தடுப்பூசி பணிகள் நடக்கும் போது தண்டோரா மூலம் அந்தந்த பகுதி மக்களுக்கு அறிவித்து விழிப்புணர்வு விளம்பரங்களை செய்ய வேண்டும்.

மேலும், கால்நடை மருத்துவ பயிற்சி மாணவர்களை கொண்டு, தடுப்பூசி மற்றும் சிகிச்சை மேற்கொள்ள, கால்நடை பராமரிப்புத்துறை பயிற்சியாளர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நோய் தொற்று தொடர்பான தகவல்களை பெற, கால்நடை வளர்ப்போர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள, 1077 என்ற இலவச எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும். கூட்டத்தில் கால்நடை பராமறிப்புத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் டாக்ட.ர் அர்தனாரி ஆவின் பொதுமேலாளர் கொம்மையன் துணைப்பதிவாளர் முனிராஜ் கால்நடை பயிற்சி மைய டாக்டர் மீனலோச்சனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழகம், கேரளாவில் முட்டை விலை 403 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 403 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வரலாறு காணாத வகையில், முட்டை விலை

உயர்ந்திருப்பதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 398 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 403 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலை, ஒரே நாளில், ஐந்து காசு அதிகரித்துள்ளது. வரலாறு காணாத வகையில், முட்டை விலை உயர்ந்திருப்பது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 392, பெங்களூரு, 390, மைசூர், 388, ஹைதராபாத், 389, மும்பை, 425, விஜயவாடா, 389, கொல்கத்தா, 450, பர்வாலா, 406, டில்லி, 430.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## விவசாய தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் : விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

விழுப்புரம் பழைய பஸ் நிலையம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு முற்போக்கு பெண்கள் கழகத்தின் வட்ட அமைப்பாளர் கண்ணம்மாள் தலைமை தாங்கினார். பிரசார குழு உறுப்பினர்கள் வேளாங்கண்ணி, சுந்தரி, மாரிமுத்து, குசேலன், வள்ளி, கலியம்மாள் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் அடுத்த கண்டம்பாக்கம், வழுதரெட்டி, ஒட்டன்காடுவெட்டி, சிந்தாமணி, தளவானூர் கிராம மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டும். இப்பகுதி மக்களுக்கு அரசின் இலவச பொருட்கள், முதியோர் உதவித்தொகை ஆகிய திட்டங்களை செயல்படுத்த வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூ., (எம்.எல்) மாவட்ட செயலாளர் வெங்கடேசன், மாவட்ட செயலாளர் செண் பகவள்ளி மற்றும் லோகநாதன், கணேசன் உள்ளிட்ட பலரும் பேசினர்.

## சொட்டு நீர் பாசனத்தில் மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அருகே சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
கள்ளக்குறிச்சி அடுத்த வினைதீர்த்தாபுரம் பகுதி விவசாயிகள் விளை நிலங்களில் மஞ்சள், மணிலா, கரும்பு, மரவள்ளி பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். போதிய மழை இல்லாவிடினும், பெய்த மழையில் இப்பகுதி விவசாயிகள் 10 மாத பயிரான மரவள்ளியை பயிரிட்டுள்ளனர்.

மழை ஏமாற்றினாலும், சொட்டு நீர் பாசனத்திற்கு மானியம் கிடைப்பதால் கிணற்று பாசனத்தை நம்பியுள்ள இப்பகுதி விவசாயிகள் மரவள்ளியை பயிரிடத் துவங்கியுள்ளனர். மரவள்ளி செடிகள் நல்ல முறையில் வளரத் துவங்கியுளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வெண்டை அறுவடை: விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதியில் வெண்டை சாகுபடி செய்த நிலங்களில் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் கரும்பு, மஞ்சள், கத்திரி, வெண்டை, மிளகாய், வெங்காயம் போன்ற காய்கறி பொருட்களும் அதிகளவில் பயிரிடப்படு
கிறது.

குறைவான நாட்களில் அதிக லாபம் தரக்கூடிய வெண்டை, கத்திரி போன்ற காய்கறி பொருட்களை விவசாயிகள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதில் தண்ணீர் தேவை குறைவு, 3 மாதம் அறுவடைக்காலமாகும் என்பதால் வெண்டை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.

42 நாட்களுக்கு மேல் வெண்டை காய்க்க துவங்குகிறது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் பறித்தால் ஒரு போகத்திற்கு 35 முறை காய் பறிக்கப்படுகிறது. ஒரு முறை பறிக்கும்

போது ஏக்கருக்கு 800 முதல் 1,000 கிலோ வரை கிடைக்கிறது.

கள்ளக்குறிச்சி அடுத்த மோ.வன்னஞ்சூர், ரோடுமாமந்தூர், குதிரைச்சந்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வெண்டைகாய் அறுவை செய்யப்படுகிறது. கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் அனைத்து செலவினங்களும் போக ரூ.ஒரு லட்சத்திற்கு மேல் லாபம் கிடைக்கிறது.
தற்போது வெண்டை பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்துள் ளதால் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.

## கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம்

விழுப்புரம் : பூவரசங்குப்பத்தில் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது.
மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மற்றும் மாவட்ட வருவாய்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று பூவரசங்குப்பத்தில் நடந்தது.
ஆர்.டி.ஓ., அனுசுயாதேவி, கால் நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் அழகரசன் மற்றும் உதவி இயக்குனர் சுந்தரராஜன் ஆகியோர் கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து பேசி னர். பின் மகளிர் மற்றும் பொது மக்களுக்கு பிளிச்சிங் பவுடர் பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.
விழுப்புரம் தாசில்தார் ரவிக்கண்ணன், துணை தாசில்தார் குணசேகரன், வி.ஏ.ஓ., உத்திரவேல், ஊராட்சி தலைவர்கள் முருகன், குமரேசன், துணை தலைவர் ஏழுமலை கலந்து கொண்டனர்.

## சொட்டுநீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம் :கூடுதல் மகசூல் கிடைப்பதால் மகிழ்ச்சி

விழுப்புரம் : சொட்டுநீர் பாசனம் அமைத்து, வேளாண் சாகுபடி செய்வதில் குறைந்த செலவில் கூடுதல் லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
பெருகி வரும் மக்கள் தொகை, குறைந்து வரும் நிலப் பரப்பு போன்ற காரணங்களால் உணவு உற்பத்தி வேகமாக குறைந்து வருகிறது. இதனை தவிர்க்க வேளாண் தொழிலில் தொழில் நுட்பங்கள் நாள் தோறும் பெருகி வருகின்றன. தமிழகத்தில் பெருகி வரும் தொழிற்சாலைகளின் காரணமாக பலரும் விவசாய

நிலங்களை விற்பனை செய்து விட்டு, மாற்றுத் தொழிலுக்கு மாறி வருகின்றனர்.முயற்சிஇதனால் வேளாண் உற்பத்தியை பல மடங்கு உயர்த்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண் டுள்ளன. வேளாண் துறை பணிகளை விரைவு படுத்த தோட்டக்கலை, வேளாண்மை, வேளாண் பொறியியல், பட்டு வளர்ச்சி, மீன் வளம் மற்றும் கால்நடை துறை என பல பிரிவுகளாக பிரித்து, தொழில் நுட்பங்களை கையாண்டு வருகின்றனர்.

இத்துறைகள் அனைத்தும் குறுகிய காலத்தில் பல்வேறு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உணவு உற்பத்தியை பலமடங்கு பெருக்குவதே முதன்மையான நோக்கமாகும்.

சொட்டு நீர்

பருவமழை குறைவு, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவது போன்ற காரணங்களால் வேளாண் சாகுபடி அனைத்து பருவத்திலும் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. இவற்றை தவிர்க்க, குறைந்த நீரில், கூடுதல் பரப்பில் பாசனம் செய்து, கூடுதல் மகசூல் பெறும் தொழில் நுட்பங்கள் கையாள சொட்டு நீர் பாசன முறையை அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

மானியம்

இதற்காக விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் பல்வேறு அளவில் மானியங்கள் வழங்கி ஊக்குவிக்கிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கர் வரை சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

5 ஏக்கருக்கு மேல் உள்ள பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மான்யம் வழங்கப்படுகிறது. மேலும் துல்லிய பண்ணைத் திட்டத்தின் கீழ் இரண்டு அல்லது மூன்று கிராமங்களைச் சேர்ந்த குழு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நீரில் கரையும் உரங்களும் இலவசமாக வழங்கப்படுகிறது.

ஆட்கள் குறைவு

வாய்க்கால் மூலம் ஒரு ஏக்கருக்கு பயன்படும் நீரை, சொட்டு நீர் பாசன திட்டத்தின் கீழ் நான்கு ஏக்கருக்கு பயன்படுத்தலாம். இம்முறையில் ஆட்கள் தேவையும்

குறைவு. மேலும் பயிர்களுக்கு தெளிக்கப்படும் மருந்துகளை, தண்ணீர் மூலம் கலந்து அனைத்து செடிகளுக்கும் தனித்தனியே கிடைக்கும் வகையில் வழங்கப்படுகிறது.

இவ்வாறு தண்ணீர் மற்றும் மருந்துகள் வீணாகாமல் பயிருக்கு நேரடியாக கிடைப்பதால், விவசாயிகளுக்கு செலவு குறைந்து, பல மடங்கு லாபம் கிடைக் கிறது. மேலும் சொட்டு நீர் பாசன மூலம் சாகுபடி செய்யப்படும் கரும்பு போன்றவைகளுக்கு களை நீக்குதல் முதல் அறுவடை வரை அனைத்து பணிகளும் இயந்திரத்தின் மூலம் நடப்பதால், விவசாயிகளுக்கு வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகிறது.

இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் பலரும் தற்போது ஆர்வமுடன் சொ ட்டுநீர் பாசனம் அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## பூமார்க்கெட் அமைக்க நடவடிக்கை தேவை : நகரத்தை தேடிச் செல்லும் விவசாயிகள்

சின்னசேலம் : சின்னசேலத்தில் பூமார்க் கெட் இல்லாததால் விவசாயிகள் தொலைவில் உள்ள நகரங்களுக்கு செல்வதால் மிகவும் சிரமபடுகின்றனர். சின்னசேலம் தாலுகாவில் பெத்தாசமுத்திரம், தோட்டப்பாடி, நமச்சியவாயபுரம், ஈரியூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட ஏக்கரில் மல்லிகை, சாமாந்தி, கோலி கொண்டை உள்ளிட்ட பூசெடிகள் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

தண்ணீர் தேவை குறைவு,

பராமரிப்பு செலவு குறைவு, அதிக லாபம் உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் பூச்செடிகள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பூமார்க்கெட் இல்லை

சின்னசேலம் சுற்றியுள்ள கிராமங்களில் பூமார்க்கெட் இல்லை. கடலூர், புதுச்சேரி, திருச்சி போன்ற இடங்களில் பூமார்க்கெட் உள்ளது. கடலூர், புதுச்சேரி பகுதியில் உள்ள பூமார்க்கெட்களில் இந்த பகுதி விவசாயிகளுக்கு விலை கட்டுப்படியாகவில்லை.

நான்கு அல்லது ஐந்து மணி நேரம் பயணம் செய்து திருச்சி நகரத்திற்கு சென்று

விற்கின்றனர். நேரத்திற்கு பஸ் இல்லாமல் வாடகைக்கு வேன் எடுத்துச் செல்கின்றனர். அவ்வளவு தூரம் செல்வதற்கு போதிய நேரம் மற்றும் பஸ் வசதி இல்லாமல் உள்ளூரில் உள்ள பூக்கடைகளில் குறைந்த விலைக்கு விற்கின்றனர்.

சாகுபடி

விவசாயிகள் அதிகாலை 5 மணி முதல் 6 மணி வரை குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கூலி ஆட்கள் வைத்து பூக்கள் பறிக்கின்றனர். காலை 8 மணிக்கு இருசக்கர வாகனங்களில் தலைவாசல், ஆத்தூர், சேலம் உள்ளிட்ட நகரங்களுக்கு கொண்டு சென்று பூக்கடைகளில் விற்கின்றனர். காலையில் சென்றால் தான் விற்க முடியும். அருகில் பூமார்க்கட் இல்லாததால் வியாபாரிகள் குறைவாக வருகின்றனர். விவசாயிகள் மிகவும் சிரமபடுகின்றனர்.

பஸ் வசதி இல்லை

விவசாயிகள் சாகுபடி செய்த பூக்களை விற்பனைக்கு கொண்டு செல்ல போதிய பஸ் வசதி இல்லை. இரு சக்கர வாகனங்களில் இரண்டு அல்லது மூன்று முறை கொண்டு செல்கின்றனர். இதனால் அதிக நேரம் மற்றும் கூடுதலாக பணம் செலவிட வேண்டியுள்ளது. விவசாயிகள் வேறு பணிகளை செய்ய முடியாமல் நாள் முழுவதும் வீணாகிறது. இதனால் பல விவசாயிகள் ஆண்டுதோறும் பயிரிடும் நிலப்பரப்பை குறைத்து வருகின்றனர்.

நடவடிக்கை தேவை

பூச்செடிகள் பயிர்செய்துள்ள விவசாயிகள் பயன் பெற பஸ் வசதியும், நிலங்களில் சாகுபடி செய்த பூக்களை லாபத்திற்கு விற்க சின்னசேலம் பகுதியில் பூமார்க்கெட் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### விவசாயிகளுக்கு பயிற்சி

கோத்தகிரி : முத்தோரை மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மையத்தில், அட்மா திட்டத்தின் கீழ், கோத்தகிரி உபகோட்ட விவசாயிகளுக்கான மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் நடந்தது. முதன்மை விஞ்ஞானி வெங்கடாசலம் தலைமை வகித்தார். முனைவர்கள் உமா மகேஷ்வரி மற்றும் சுதா ஆகியோர், உருளைக்கிழங்கு சாகுபடி முறைகள், பூச்சி நோய் தாக்குதல், நோயை கட்டுப்படும் முறை ஆகியவை குறித்து விளக்கம் அளித்தனர். இதில், 50 விவசாயிகள் பங்கேற்று

பயனடைந்தனர். துணை வேளாண்மை அலுவலர் மற்றும் அட்மா திட்டப்பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## கோமாரியால் கால்நடைகள் பலி நடவடிக்கைக்கு வேண்டுகோள்

ஈரோடு: ஈரோடு அடுத்த, நசியனூர் செங்காளிபாளையம் பகுதிகளில் கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் இறப்பதாக, கலெக்டரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில வாரமாக, கோமாரி நோய் தாக்குதலால் ஏராளமான கால்நடைகள் இறந்து வருகிறது. கோமாரி நோயால், மாவட்டம் முழுவதும் கால்நடை சந்தைக்கும், வெளி மாநிலத்தில் இருந்து, ஈரோட்டுக்கு கால்நடைகள் கொண் டு வருவதற்கும், விற்பனை செய்யவும், மா வட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

இந்நிலையில், நசியனூர் செங்காளிபாளையம் பகுதியில், கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் இறந்து வருவதாக, அப்பகுதி விவசாயிகள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து நசியனூர் செங்காளிபாளையம், செந்தில் நகரை சேர்ந்த பழனிசாமி கூறியதாவது: ஈரோடு மாவட்டம் பெருந்துறை தாலுகா, பெரியவிளாமலை பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் ஏராளமான விவசாயிகள், கலப்பின பசுக்கள், எருமைகள், ஆடுகளை வளர்த்து வருகின்றனர். அப்பகுதியில் கோமாரி நோயால், நூற்றுக்கணக்கான ஆடு, மாடு, எருமைகள் இறந்ததால், விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

எங்கள் பகுதியில், கோமாரி நோய்க்கான சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்யாததால், நாட்டு வைத்தியம் மூலம் கால்நடைகளை காக்க விவசாயிகள் போராடுகின்றனர். எனினும், கோமாரி நோய்க்கு, பல கால்நடைகள் பலியானதால், எங்கள் பகுதியை சேர்ந்த விவசாயிகளின் நிலை கேள்விக்குறியாகி உள்ளது.

எனவே, கால்நடைத்துறை மூலம், பெரியவிளாமலை பஞ்சாயத்துக்கு உட்பட்ட

பகுதிகளில், கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம்கள் நடத்த, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### சாஸ்தாகோயில் அணை திறப்பு

சேத்தூர் : சாஸ்தாகோயில் அணை நிரம்பியதை தொடர்ந்து, பாசனத்திற்காக திறந்து விடப்பட்டது. தேவதானம் நகரி ஆற்றின் குறுக்கே சாஸ்தாகோயில் அணை கட்டப்பட்டுள்ளது.கடந்த இரு நாட்களாக, மேற்கு மலை தொடர்ச்சி பகுதியில், பெய்த கன மழையின் காரணமாக, அணை நிரம்பியது.தற்போது அணை நீர் திறந்துவிடப்பட்டு, நகரைகுளம், வாழவந்தான்,நச்சாடைபேரி கண்மாய்களுக்கு செல்கிறது. இப்பகுதியில் முதல் போக நெல் பாசனத்திற்கான, வேலைகள் நடைபெற்று வருகின்றன. தொடந்து மழை பெய்யும் பட்சத்தில், இதன் மூலம் பாசன வசதி பெறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில், நெல் சாகுபடிக்கு உதவியாக அமையும்.

### "கோமாரி'யிலும் தாங்கி நிற்கும் "ஆவின்' சாதனை : 52 ஆயிரம் லிட்டரை தாண்டியது

காரைக்குடி : கோமாரி நோய் தாக்கத்தால், தமிழகமெங்கும் பால் உற்பத்தி சரிந்து வரும் வேளையில், காரைக்குடி ஆவினில் பால் உற்பத்தி 52 ஆயிரம் லிட்டரை தாண்டியுள்ளது.

ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களை உள்ளடக்கிய,காரைக்குடி ஆவினுக்கு, 295 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், 295 மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பால் வரத்து உள்ளது. 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. சிவகங்கை, திருப்பத்தூர் தாலுகா பகுதியிலிருந்து அதிக அளவில் பால் வரத்து உள்ளது.

கால்நடைகளை கோமாரி நோய் தாக்கியபோதும், ஆவின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள 12 டாக்டர்கள், மற்றும் கால்நடைத்துறை டாக்டர்களால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, தடுப்பு ஊசி போடப்பட்டது.

இதன் காரணமாக, கோமாரி நோய் தாக்குதலில் இருந்து கறவை மாடுகள் தப்பின.

கடந்த 10ம் தேதிக்கு முன்பு 50 ஆயிரம் லிட்டராக இருந்த பால் வரத்து, தற்போது 52 ஆயிரம் லிட்டரை தாண்டியுள்ளது. இவற்றில் 29 ஆயிரம் லிட்டர் மாவட்ட விற்பனைக்கும், மீதி பால், மதுரை, கேரளாவிற்கும் அனுப்பப்படுகிறது. காரைக்குடி ஆவின் சேர்மன் சண்முகம் கூறும்போது: கோமாரி நோய் தாக்கத்தால், காரைக்குடி ஆவினுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. சிவகங்கை மாவட்டத்தில் 12 சமூக நல பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, புதிய கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டுக்குள் காரைக்குடி ஆவின் மூலம், 75 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயித்துள்ளோம். சிவகங்கையில் 10 ஆயிரம் லிட்டர், பரமக்குடியில், 10 ஆயிரம் லிட்டர் குளிர்விப்பான், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தில் 8 தொகுப்பு பால் குளிர்விப்பான் நிறுவப்பட்டுள்ளது. ராமநாதபுரத்தில் புதியதாக நான்கு குளிர்விப்பான்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என்றார்.

## விலை உயர்வு எதிரொலி: மிளகாயில் ஊடு பயிராக வெங்காயம் சாகுபடி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆண்டுதோறும் பருவ மழை காலங்களில் அதிக மழைபொழிவு இருந்தால், வெங்காயம் விளைச்சல் பாதிக்கப்படும். இதனால் சின்ன வெங்காயம் விலை உயர்வது வழக்கம். ஆனால் பருவ மழை குறைவான பகுதிகளில் இருந்து, புதிய வெங்காயம் வரத்து ஆரம்பித்த பின், இதன் விலை படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். ஆனால் கடந்தாண்டு வெங்காயம் வரத்து இல்லை. கிலோ 50க்கு விற்கப்பட்ட இதன் விலை ரூ.100க்கும், 40க்கு விற்கப்பட்ட பல்லாரி ரூ.85 வரையும் விற்கப்பட்டது. சாமானியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆர்.எஸ்.மங்கலம், புல்லமடை, சனவேலி, சேத்திடல், சீனாங்குடி, வண்டல், செங்குடி, பூலாங்குடி உட்பட பல கிராமங்களில் மிளகாயில், ஊடுபயிராக சிறிய வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். செங்குடி விவசாயி மிக்கேல்ராஜ் கூறும்போது: வீட்டு தேவைக்காக, வெங்காயம் விதை, கிலோ ரூ.120க்கு வாங்கி பயிர் செய்துள்ளேன். என்னை போல பலரும் வெங்காய சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர், என்றார்.

## "ஹைடெக்' முறையில் கத்தரிக்காய் சாகுபடியில் கலக்கல்

தேவாரம் : தற்போது ஐ.டி., துறைகளில் வேலை செய்பவர்கள் பெறும் சம்பளத்தை விட கூடுதலாக வருவாய் ஈட்டும், கிராமத்து "இளம் விவசாயி' ஒருவர் "ஹை டெக்' விவசாய முறையால்,ஆண்டிற்கு 10 லட்சம் ரூபாய்க்கும் மேல் சம்பாதிக்கிறார். மழை இல்லை, நிலத்தடி நீரும் இல்லை. நல்ல விளைச்சலும் இல்லை, விளைந்ததற்கு கட்டுப்படியான விலையுமில்லை, என்பதுதான் பெரும்பாலான கிராம விவசாயிகளின் புலம்பல். அதே நேரம், முயன்றால் முடியாதது எதுவுமில்லை, என சொட்டு நீர்ப் பாசன முறையில், ஒட்டு ரக கத்தரிக்காய் சாகுபடி செய்து சாதனை படைத்து வருகிறார் தேவாரத்தை சேர்ந்த இளம் விவசாயி ஜெகன்ராஜா.

தேனி மாவட்டம், தேவாரம் மலையடிவாரப் பகுதி வானம் பார்த்த பூமி. மலைப்பகுதியில் பெய்யும் மழைநீரை முறையாக சேமிக்காததால், நிலத்தடி நீர் மட்டம் 200 அடிக்கும் கீழ் இறங்கி விட்டது. நீர் பற்றாக்குறையால், மூன்றில் ஒரு பங்கு விவசாயத்தை, விவசாயிகள் மேற்கொள்கின்றனர்.தேவாரத்தை சேர்ந்த இளம் விவசாயி, ஜெகன்ராஜா, 33, தனது குடும்ப சொத்தில் கிடைத்த, 4 ஏக்கர் நிலத்தில் காய்கறி, கரும்பு, மரவள்ளி என பயிரிட்டு வந்தார்.

விளைச்சல் அதிகமாக இருக்கும் போது, விலை இல்லாமலும், நல்ல விலை கிடைக்கும் போது, விளைச்சல் குறைவாலும், போதிய வருவாய் இன்றி சிரமப்பட்டார். ஒட்டு ரக கத்தரிக்காய் சாகுபடி செய்தால் நல்ல லாபம் கிடைக்கும், என்ற தகவல் அவருக்கு ஆறுதலாக அமைந்தது.

அரசு மானியம் பெற்று, ஒன்றரை ஏக்கர் நிலத்தில் "சொட்டு நீர்' குழாய் பதித்தார். ஒட்டு ரக கத்தரிக்காய் பயிரிட்டு கவனமாக வளர்த்தார். இரண்டு மாதத்தில், 4 லட்ச ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைத்துள்ளது. இன்னும் இரண்டு மாதங்கள் பலன் கிடைக்கும்.ஜெகன்ராஜா கூறியதாவது:

சாதனை விவசாயியாக வர வேண்டும் என்ற ஆர்வத்தை, "தினமலர்' நாளிதழ் வளர்த்தது. கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து "தினமலர்' நாளிதழ்

வாங்குகிறேன். விவசாய மலரில் வரும் கட்டுரையில், எனது பெயர் இடம் பெற வேண்டும் என்ற ஆவல் இருந்தது. தொழில் நுட்ப சாகுபடி முறையில், சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், ஒட்டு ரக கத்தரிக்காய் பயிரிட்டேன்.

கடின உழைப்பின் பலனாக, நல்ல மகசூல் கிடைக்கிறது. ஒன்றரை ஏக்கர் நிலத்தில், வாரம் 5 டன் கத்தரிக்காய் பறிக்கப்படுகிறது. சராசரியாக கிலோவிற்கு 10 ரூபாய் கிடைத்தாலும், வாரம் 50 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. எனது சாதனைக்கு துணை நின்ற "தினமலர்' நாளிதழுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன், என்றார். விவசாயி ஜெகன்ராஜாவிடம் "ஹலோ' சொல்ல, 75026 26080.

## மழை இல்லாததால் 220 கண்மாய்கள் நிரம்பவில்லை : மானாவாரி விவசாயிகள் தவிப்பு

தேவதானப்பட்டி : மழை இல்லாததால், தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகாவில், 10 ஆயிரம் ஏக்கரில் முதல்போக நெல் சாகுபடி கேள்விக்குறியாகி விட்டது. கண்மாய்கள், நீர்நிலைகள் வறண்டு கிடப்பதால் நாற்றங்கால் பணியை விவசாயிகள் தவிர்த்துள்ளனர்.

பெரியகுளம் தாலுகாவில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது. வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, சிந்துவம்பட்டி, நல்லகருப்பன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, அ.வாடிப்பட்டி, குள்ளப்புரம் ஆகிய கிராமங்களில் கண்மாய் பாசனம் மூலம் முதல்போக நெல் சாகுபடியை மேற்கொண்டு வந்தனர்.

கண்மாய்களுக்கு நீர் ஆதாரமாக உள்ள வராகநதியின் நீர்பிடிப்பு பகுதியான மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் போதிய அளவு மழை இல்லாததால், வராக நதியில் நீர்வரத்து ஏற்படவில்லை.

இதனால் மருகால்பட்டி சிறுகுளம், பொம்மிநாயக்கன்பட்டி சிறுகுளம் உட்பட 10க்கும் மேற்பட்ட கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன.

சாத்தாகோயில் பட்டி, தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி, அட்டணம்பட்டி, புல்லக்காபட்டி, டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி கிராமங்களில் மஞ்சளாறு

அணையில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டு முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது.

மஞ்சளாறு அணை 57 அடி உயரம் உள்ளது. தற்போது 45 அடி நீர் உள்ளது.

வழக்கமாக அக்டோபர் 15க்கு பிறகு முதல் போக நெல் சாகுபடிக்கு நீர் திறப்பது வழக்கம்.

நடப்பு ஆண்டில், நெல் சாகுபடிக்கு நீர் திறப்பது சந்தேகமாக உள்ளது. கடந்த ஆண்டும் இதே போல் அணையில் நீர் இருப்பு குறைவாக இருந்ததால், முதல்போக நெல் சாகுபடியை விவசாயிகள் தவிர்த்தனர்.

நீர்நிலைகள் வறண்டதால் நிலத்தடி நீர் மட்டம் 800 அடிக்கு கீழ் சென்று விட்டது. இதனால் விவசாய கிணறுகளும் வறண்டுள்ளன.

மாவட்டத்தில், கிராமப்புறங்களில் உள்ள 220 கண்மாய்கள் இதுவரை நிரம்பவில்லை.மிக சொற்ப அளவே நீர் உள்ளது. இந்நிலையில் முதல் போக நெல் சாகுபடிக்காக நெல் நாற்றங்கால் அமைக்கும் பணியை விவசாயிகள் தவிர்த்துள்ளனர். இதனால், பெரியகுளம் தாலுகாவில் மட்டும் 10 ஆயிரம் ஏக்கரில் முதல்போக நெல் சாகுபடி கேள்விக்குறியாக உள்ளது.

## காய்கறி விலை அதிகரிப்பு

திண்டுக்கல் : சபரிமலைக்கு செல்வதற்காக மாலை அணிந்து விரதமிருக்கும் ஐயப்ப பக்தர்கள் சைவ உணவை மட்டுமே உட்கொள்வர் என்பதால் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

வரத்து சீராக இருந்தாலும், தேவை அதிகரிப்பால் அனைத்து காய்கறியின் விலை திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் கிலோவிற்கு ரூ. 5 லிருந்து 10 வரை அதிகரித்தது.

தக்காளி ரூ. 30 க்கும், கத்திரிக்காய் ரூ. 25 க்கும் விற்கப்பட்டது. காலிபிளவர், பூ ஒன்றுக்கு ரூ. 20 என, விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. முட்டைக்கோஸ் ரூ. 20 க்கும்,

சவ்சவ் 15 க்கும் விற்பனையானது. புதினா, மல்லி தழைகளுக்கான கட்டுகள் தலா ரூ. 10 க்கு விற்கப்பட்டன. காய்கறிகளின் வரத்து சீராக இருந்தாலும் சரிமலை

சீசன் எதிரொலி காரணமாக விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## மழை இல்லாததால் தீவனத்திற்கு சிக்கல் : கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

திண்டுக்கல் : மழை இல்லாததால் மாடுகளுக்கு மேய்ச்சல் புல் கிடைக்காமல், கால்நடைவளர்ப்போர் பாதிப்புக்குள்ளாகின்றனர். கால்நடைகளுக்கு தீவனம் இல்லாமல் அவற்றை காப்பாற்றுவது கேள்விக்குறியாக உள்ளது.
திண்டுக்கல் மாவட்டத்தில் சராசரி மழையளவு 836 மி.மீ. ஆனால் நவம்பர் மாதம் வரை 456 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது.

இதனால் குளங்கள், கண்மாய்கள் நீரின்றி காய்ந்து கிடக்கின்றன. நிலங்களில் புற்கள் முளைக்கவில்லை. கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கு புல் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.
மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகள் குளங்களில் தண்ணீர் குடித்துவரும். தற்போது குளங்களில் தண்ணீர் இல்லை. குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஆடு, மாடுகளுக்கு தண்ணீர் வைக்க, கால்நடை வளர்ப்போர் சிரமப்படுகின்றனர்.
விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பலர் பாரம்பரியமாக மாடுகளை காடு மற்றும் புற்கள் வளர்ந்துள்ள பகுதியில் மேயவிட்டு, வளர்த்துவந்துள்ளனர்.
இந்த ஆண்டு பருவ மழை தொடர்ந்து பொய்த்ததால் காடுகளில் போதிய புற்கள் வளரவில்லை. மேய்ச்சல் நில பகுதிகளும் காய்ந்துகிடக்கின்றன. இதனால் தீவனம் விலைக்கு வாங்க வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
இதுவரை தீவனத்தை விலைக்கு வாங்காமலேயே மேயவிட்டு வளர்த்துவந்தவர்கள். தற்போது தீவன செலவால் கால்நடைகளை வளர்க்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.
விருவீடு ஊ.வாடிப்பட்டியை சேர்ந்த மாடு வளர்க்கும் ஆர். செல்வம் கூறுகையில், ""கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் மாடுகளை கிராமங்களில் மேய்த்து வருகிறோம். இந்தாண்டு மழை இல்லாததால் காய்ந்த புற்களை மாடுகள் மேய்ந்து, எலும்பும், தோலுமாக உள்ளன, என்றார்.

அ.பஞ்சராஜ் கூறுகையில், ""எங்களிடம் ஆயிரம் மாடுகள் உள்ளன. இதில் 10

காளை மாடுகள், 990 பசு மாடுகள். வறட்சி காரணமாக தீவன பற்றாக்குறையால் இனி மாடுகளை பராமரிப்பது சிரமமான காரியம் தான்," என்றார்.

### வேதையில் திடீர் மழையால் சம்பா பணி மீண்டும் துவக்கம்

வேதாரண்யம்: வேதாரண்யம் சுற்றுவட்டார பகுதியில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் திடீர் மழையை தொடர்ந்து சம்பா விவசாய பணிகளை விவசாயிகள் மும்முரமாக துவக்கியுள்ளனர்.

நாகை மாவட்டம், வேதாரண்யம் தாலுக்காவில் ஆதனூர், அண்டர்காடு, நெய்விளக்கு, கருப்பம்புலம் உள்பட 15 கிராமங்களில் 10 ஆயிரம் ஹெக்டர் பரப்பில் சம்பா பயிர் சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டனர்.

வடகிழக்கு பருவ மழை, மேற்கண்ட பகுதியில் போதிய அளவில் பெய்யாததால் விவசாயிகள் கவலையடைந்தனர். இதையடுத்து, நேற்று முன்தினம் காலை முதல் வேதாரண்யம் சுற்றுவட்டார பகுதியில் திடீர் மழை பெய்ய துவங்கியுள்ளது.

வேதையில் நேற்று முன்தினம் 18.2 மி.மீ., மழையும், நேற்று 59.4 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. இம்மழையை அடுத்து, விவசாயிகள் சம்பா சாகுபடி பணிகளை மீண்டும் விவசாயிகள் மும்முரமாக துவக்கியுள்ளனர்.

மேலும் 2 நாட்களுக்கு மழை பெய்தால் மட்டுமே வயலில் உரமிடும் பணியை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என, வேதை பகுதி விவசாயிகள் கூறினர்.

### இயற்கை வேளாண் பயிற்சி மையத்தில் கருத்தரங்கம்

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகேயுள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண்மை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இயற்கை வேளாண்மையில் கூட்டுறவுத்துறையில் பங்களிப்பு என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

இதில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் பக்கிரிசாமி தலைமை வகித்தார். மன்னை கூட்டுறவு சங்க துணைப்பதிவாளர் சத்தியமூர்த்தி, ஆதிரெங்கம் பஞ்., தலைவர் அப்துல் முனாப் பங்கேற்றனர். சங்க செயலாளர் நமச்சிவாயம் வரவேற்றார்.

இயற்கை விவசாயம் மற்றும் கூட்டுறவுத்துறை மேற்கொள்ள வேண்டிய பணிகள்

குறித்து, கிரியேட் மைய பயிற்சி இயக்குனர் ஜெயராமன் பேசினார்.

திருவாரூர் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் பேசுகையில், ""இயற்கை விவசாய முறை, இதனால் உற்பத்தியாகும் உணவு மனிதர்களுக்கு மிக ஆரோக்கியமானது. மண் வளமும் பாதுகாக்கப்படும். அதனால், இம்முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். பாரம்பரிய நெல் ரகம் குறித்து விழிப்புணர்வு அவசியம்," என்றார்.

இதில், கூட்டுறவு சங்க அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர். ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.11.2013**

## கேரள எல்லைகளில் கண்காணிப்பு

## கோமாரி நோய் தாக்குதல் தமிழகத்தில் பால் உற்பத்தி சரிகிறது




நெல்லை: தமிழகத்தில் பல மாவட்டங்களில் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை துறையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். பிற மாவட்டங்களை தொடர்ந்து நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர், ரெட்டியார்பட்டி, நயினாரகரம், பாம்புகோவில் சந்தை, திருவேங்கடம், மேலப்பாளையம், கடையம், பாவூர்சத்திரம், முக்கூடல் ஆகிய 9 இடங்களில் கூடும் மாட்டுச் சந்தைகளை ஒரு மாதம் நடத்த தடை விதித்து கலெக்டர் கருணாகரன் உத்தரவிட்டுள்ளார். கால்நடைகளை கேரளா கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கங்கைகொண்டான், காவல்கிணறு விலக்கு, கேரள எல்லையான சிவகிரி, செங்கோட்டை ஆகிய நான்கு எல்லைகளும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் கால்நடைகள் வெளி மாவட்டம் கொண்டு செல்லப்படுகிறதா, வெளியூர் கால்நடைகள் உள்ளே நுழைகிறதா என 4 இடங்களிலும் தலா ஒரு உதவி கால்நடை மருத்துவர் தலைமையிலான குழு கண்காணித்து வருகிறது என

கால்நடை துறையினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து நெல்லை மண்டல கால்நடை துறை இணை இயக்குநர் கெங்காராஜ் கூறுகையில், 'நெல்லை மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் இல்லை. எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாட்டுச் சந்தைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுÕ என்றார். திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் தீவனம் ஏற்காமல் பசுக்கள் மெலிந்து பால் சுரக்கும் தன்மை குறைந்துள்ளது. கோமாரி நோய் தாக்கிய மாட்டின் பால் கன்றுக்கு வழங்குவதையும், மற்றவர்கள் பயன்படுத்துவதையும் தவிர்த்து வருகின்றனர். எனவே, தமிழகத்தில் பால் உற்பத்தி கடந்த 15 நாட்களாக படிப்படியாக குறைந்து வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சராசரியாக தினமும் 30 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி குறைந்திருக்கிறது. கோமாரி நோயின் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், பால் உற்பத்தி இன்னும் குறையும் வாய்ப்புள்ளது.

எக்ஸ்ட்ரா தகவல்

கோமாரி நோய் தாக்கிய கறவை மாட்டுக்கு பால் சுரக்கும் தன்மை முற்றிலும் பாதிக்கும். மேலும், காம்பு பகுதியில் புண் ஏற்படுவதால், பால் சுரக்காது. நோய் பாதித்த பசுவின் பாலை கன்றுக்கு அளிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

## ]உச்ச நீதிமன்றத்தில் முறையிட விவசாய சங்கங்கள் முடிவு




கோவை: கெயில் நிறுவனம் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தை செயல்படுத்த எந்த தடையும் இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கி உள்ளது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு 7 மாவட்டங்களை சேர்ந்த

விவசாயிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் வாழ்வாதார நலச்சங்கத்தின் சேலம் மாவட்ட பொறுப்பாளர்மாணிக்கம் கூறியதாவது: ஏற்கனவே விவசாயம் நலிந்து வரும் நிலையில், இந்த திட்டத்தை செயல்படுத்தினால், தமிழகத்தில் எதிர்காலத்தில் விவசாயம் என்பதே கேள்விக்குறியாகிவிடும். மறுசீராய்வு செய்ய வேண்டும் என்று நீதிபதிகளிடம் முறையிட்டுள்ளோம். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் விரைவில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளோம்.

தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் கந்தசாமி:

இந்த வழக்கில் விவசாயிகள் தரப்பில் யாரும் ரிட் மனு தாக்கல் செய்யவில்லை என உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. கோவை பாலத்துறையை சேர்ந்த மோகன பாலசுப்பிரமணியம் என்பவர் ஏற்கனவே ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளோம். எங்களைப்போலவே தமிழக அரசும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அனைத்து கட்சி களையும் ஒன்றுசேர்த்து, கெயில் நிறுவனத்தை எதிர்த்து போராட்டம் நடத்துவோம்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்ட தலைவர் மோகன்:

விளைநிலங்களில் காஸ் குழாய் பதித்தால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். வளர்ச்சி திட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் கிடையாது. ஆனால், முறையாக இழப்பீடு வழங்காமல் இப்பணி மேற்கொள்வதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். இழப்பீடு வழங்குவதோடு பாதிக்கப்படும் அனைத்து விவசாயிகளுக்கும் மாற்றுஇடம் வழங்கவேண்டும். உரிய இழப்பீடு வழங்காத வரை காஸ் குழாய் பதிக்கும் பணியை மேற்கொள்ளக்கூடாது.

தமிழக விவசாயிகள் வாழ்வாதார பாதுகாப்பு குழு தலைவரும், கோவை தொகுதி எம்.பி.யுமான பி.ஆர்.நடராஜன் கூறியதாவது:

இந்த தீர்ப்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் உள்ளது. எனவே, இந்த தீர்ப்பை எதிர்த்து மாநில அரசு, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவேண்டும்.

கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரன்:

தமிழக விவசாயிகளின் உணர்வுகளை கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய இருக்கின்றோம். மாற்று பாதையில் எரிவாயு குழாய்களை எடுத்துச் செல்ல வேண்டுமென்று மாநில அரசும், விவசாயிகளும் கேட்டுக் கொண்ட பிறகும், கெயில் நிறுவனம் அடம் பிடித்து வருவது கண்டிக்கத்தக்கது. கெயில் நிறுவனம் தமிழ் மண்ணில் விவசாயிகளுக்கு எதிராக எரிவாயு குழாய்களை பதிக்க விடமாட்டோம். மாற்று பாதையில் எரிவாயு குழாய் பதிப்பதை பற்றி யோசிக்க வேண்டும். இவ்வாறு ஈஸ்வரன் கூறியுள்ளார்.

கெயில் நிறுவனம் வழக்கு தொடர்பாக நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, தமிழக அரசு மேல் முறையீடு செய்ய வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ராமகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

### கடுமையான விதிமுறைகளால் விவசாயிகள் கலக்கம்

'நில அனுபவ உரிமை என்ற பெயரில், நிலத்தை அதிகாரிகள் கையகப்படுத்தி உள்ளனர். அவர்கள் பதிக்கும் குழாய், நிலத்தின் மட்டத்திலிருந்து 3 அடி ஆழத்தில் உள்ளது. இதனால் விளைநிலம் பிரிந்து விவசாயம் செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. குறுகிய கால பயிர்களை பயிரிட்டால் பைப் லைனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று சொல்கின்றனர். தமிழகத்தில் நாளுக்கு நாள் மழை பொய்த்து வருவதால் சோளம், தட்டைப்பயிர், பச்சைப்பயிர் போன்ற குறுகிய கால பயிர்களை பயிரிடுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளது. இதே போல் குழாய் பதிக்கப்பட்ட நிலத்தை சமன்படுத்தி பயிரிடுவதிலும் சிக்கல் உள்ளது. கியாஸ் லைன் பதிக்கப்பட்ட பகுதிகளில் கசிவு போன்ற அசம்பாவிதங்கள் நடந்தால், சம்மந்தப்பட்ட நிலத்தை வழங்கிய விவசாயிகளே பொறுப்பேற்க வேண்டும். மேலும், அவருக்கு 7 வருட சிறை தண்டனை வழங்கப்படும். அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபித்து வெளியே வரவேண்டும். இரண்டாவது முறையாக தவறு நடக்கும் பட்சத்தில், கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று கடுமையான சட்டவிதிமுறைகளை கெயில் வகுத்திருப்பது விவசாயிகளை கலக்கத்தில் ஆழ்த்தியது.

### 7 மாவட்டங்களில் 310 கி.மீ  குழாய்

*கெயில் நிறுவனம் (காஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா) கொச்சியிலிருந்து பெங்களூர் வரை 871 கிலோ மீட்டர் தூரத்திற்கு சமையல் எரிவாயு குழாய்கள்

பதிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

*கேரளாவில் 501 கிலோ மீட்டர், தமிழகத்தில் 310 கிலோ மீட்டர், கர்நாடகாவில் 60 கிலோ மீட்டர் நீளத்துக்கு பைப் லைன் அமைக்கப்படும். இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.3263 கோடி.

*தமிழகத்தில் கோவை, திருப்பூர், சேலம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி என 7 மாவட்டங்கள் வழியாக எரிவாயு குழாய் செல்லும்.

*தமிழகத்தில் 136 கிராமங்களில் உள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தால் 10ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் நேரடியாகவும், 50 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகிறது.

* கியாஸ் பைப்லைன் அமைக்க 4 அடி அகலமும், 8 அடி ஆழமும் கொண்ட பைப்லைன் பதிப்பு குழிகள் வெட்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டது.

*விளை நிலத்தில் காஸ் குழாய் பதிக்கப்பட்டால் விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

*ஆனால், ஆபத்து எதுவும் இல்லை என்று கெயில் கூறுகிறது. இந்தியாவில், 12 ஆயிரம் கி.மீ காஸ் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் பெரும்பாலானவை விவசாய நிலங்களில் பதிக்கப்பட்டிருப்பதாகவும் கெயில் கூறியுள்ளது.

## தேங்காய் விலை கிடுகிடு உயர்வு

கோவை, : கோவை மாவட்டத்தில் தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கோவை மாவட்டம் நரசீபுரம், தொண்டாமுத்தூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார்சாமக்களம் ஆகிய பகுதியில் இருந்து தேங்காய் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கிருந்து தினமும் கோவை உழவர் சந்தை மற்றும் தினசரி காய்கறி மார்க்கெட்டுகளுக்கு 70 முதல் 100 டன் வரை தேங்காய் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

தற்போது நவம்பர் மாதம் என்பதால் வரத்து குறைந்துள்ளது. அதனால் கொள்முதல் இடத்தில் இருந்து தேங்காய் ஒன்று ரூ.12 முதல் ரூ.13 வரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆனால், தேங்காய் உழவர் சந்தை மற்றும் தினசரி மார்க்கெட்டுகளில் வரும்போது அதன் விலை கூடுகிறது. தற்போது கோவை மார்க்கெட்டுகளில் ஒருதேங்காய் ரூ.18 வரை விற்கப்படுகிறது.

மேலும் கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் உள்ள மளிகை கடைகளில் தேங்காய் ஒன்றின் விலை ரூ.20 முதல் ரூ.22 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பெண்கள் கடைக்காரர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றனர். மேலும் கோவை மாவட்டத்தில் தேங்காய் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி சந்தேகம்**

உடுமலை,: அமராவதி அணை பாசனத்தில் 2ம் போக நெல் பயிரிட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் நெல்சாகுபடி கேள்விக்குறியாக இருக்கிறது. உடுமலை அமராவதி அணையின் மூலம் 6500 ஏக்கரில் நெல்சாகுபடி நடக்கிறது. கல்லாபுரம், ராமகுளம்,குமரலிங்கம், சர்க்கார்கண்ணாடிப்புத்தூர்,« சாழமாதேவி, கணியூர்,காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் நெல் சாகுபடி நடக்கிறது. போதிய மழை பெய்து அமராவதி அணை நிரம்பாததால் கடந்த 2 ஆண்டு கள் விவசாயிகள் பயரிடுவதை தவிர்த்தனர். தென்மேற்கு பருவமழை ஓரளவு பெய்து அணை நிரம்பியதால் கடந்த ஜூன் மாதம் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. அதனால் விவசாயிகள் நெல்சாகுடி செய்தனர். தற்போது அறுவடை நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்திலேயே 2ம் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி விடுவார்கள். ஆனால் வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்ய வில்லை இதனால் அணைக்கு நீர்வரத்தில்லை. இருப்பதோ 37 அடி தண்ணீர்தான் உள்ளது. இதைக்கொண்டு நெல் பயிரிட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். வடகிழக்கு பருவமழை தீவிரம் காட்டவில்லை என்றால் இங்கு 2ம் போக சாகுபடி சந்தேகம்தான் என விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

**வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை குறைந்தது**

கோவை, :கோவை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த வாரம் முன்பு பெய்த மழையால் காய்கறி பறிப்பு குறைந்தது. இதனால் ஆர்.எஸ்.புரம், சிங்காநல்லூர் உழவர் சந்தைகள் மற்றும் மொத்த காய்கறி மார்க்கெட் மற்றும் சில்லரை காய்கறி கடைகளுக்கு வரத்து குறைந்தது. இதனால் பெரும்பாலான காய்கறிகளின் விலை உயர்ந்தது. கடந்த வாரம் மழை ஓய்ந்து, காய்கறி வரத்து படிப்படியாக உயர்ந்தது. இதனால் காய்கறி விலை குறைந்து வருகிறது.

கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் கடந்த வாரம் 16ம் தேதி விற்ற முதல்தர காய்கறி விலையோடு, நேற்று(24ம் தேதி) விற்பனையான முதல்தர காய்கறி விலை ஒப்பிடுகையில் பெருவாரியான காய்கறிகளின் விலை குறைந்தது.

இதில், ரூ.200க்கு விற்ற பட்டாணி ரூ.80 குறைந்து ரூ.120 ஆகவும், காரட் ரூ.14 குறைந்து ரூ.52க்கும், சின்ன வெங்காயம் ரூ.10 குறைந்து ரூ.65 ஆகவும், சாதா பீன்ஸ் ரூ.10 குறைந்து ரூ.16க்கும், கறி பீன்ஸ் ரூ.10 குறைந்து ரூ.16க்கும், புஷ்பீன்ஸ் ரூ.10 குறைந்து ரூ.26க்கும், பஜ்ஜி மிளகாய் ரூ.8 குறைந்து ரூ.35க்கும், காலிபிளவர் ரூ.5 குறைந்து ரூ.35க்கும், பச்சை மிளகாய் ரூ.4 குறைந்து ரூ.16 ஆகவும், பெரிய வெங்காயம் ரூ.4 குறைந்து ரூ.46 ஆகவும், சுரைக்காய் ரூ.2 குறைந்து ரூ.10 ஆகவும், பூசணிக்காய் ரூ.2 குறைந்து ரூ.13க்கும் விற்றது.

இதற்கு மாறாக ஆப்பிள் தக்காளி விலை ரூ.32லிருந்து ரூ.6 உயர்ந்து நேற்று ரூ.38 ஆகவும்,  வெண்டைக்காய் ரூ.4 உயர்ந்து ரூ.24ஆகவும், பீட்ரூட் ரூ.4 உயர்ந்து ரூ.28 ஆகவும், பூண்டு ரூ.30 உயர்ந்து ரூ.145 ஆகவும் விற்றது.

ஆப்பிள் தக்காளி, வெண்டைக்காய் பூக்கள் கடந்த வார மழைக்கு உதிர்ந்ததால் ஏற்பட்ட மகசூல் இழப்பு சீராகவில்லை. அதே போல் மலை பகுதியிலிருந்து பீட்ரூட், பூண்டு ஆகியவை மழையால் பாதிக்கப்பட்டு, அறுவடை பாதிக்கப்பட்டதால் வரத்து சீராகவில்லை. இதனால் அவற்றின் விலை அதிகரித்துள்ளது.

**ஹெலன் புயலால் பாதிக்கப்பட்ட ஏனாம் பகுதி விவசாயிகளுக்கு நிதி உதவி**

சித்தூர், : ஹெலன் புயலால் பாதிக்கப்பட்ட ஏனாம் பகுதி விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக புதுவை மின்சாரவாரித்துறை அமைச்சர்

சித்தூரில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். ஆந்திர மாநிலத்தில் உள்ள புதுச்சேரி அரசுக்கு சொந்தமான ஏனாம் பகுதியில் ஹெலன் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களை புதுச்சேரி மின்வாரியத்துறை அமைச்சர் டி.தியாகராஜன் நேற்று பார்வையிட முடிவு செய்தார்.

அதன்படி ஏனாம் பகுதியில் உள்ள கடலோர பகுதிகளை அவர் பார்வையிட்டார். பின்னர் சித்தூரில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் ஏனாம் பகுதியில் புயல் காரணமாக நீரில் மூழ்கிய விவசாய நிலங்களுக்கான விவரங்களையும் மற்றும் பல்வேறு துறைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை குறித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அமைச்சர் டி.தியாகராஜன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

ஹெலன் புயல் காரணமாக ஏனாம் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகள், விவிசாயிகளின் நிலங்கள் மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை குறித்து அனைத்து விவரங்களை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமிக்கு பரிந்துரை செய்கிறேன். மேலும் இந்த பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்க முதல்வருடன் ஆலோசனை நடத்த உள்ளேன். என்றார்.

பின்னர் ஹெலன் புயல் காரணமாக ஏனாம் பகுதியில் உள்ள கடலில் நீரில் மூழ்கி பலியான வீரபாகு வீட்டு சென்று அவரின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார். இதில் ஏனாம் பகுதி கலெக்டர் தீபக்குமார், எம்எல்ஏ கிருஷ்ணராவ் உடனிருந்தனர்.

**திருவண்ணாமலை மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை**

வேலூர், : வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்தது. சோளிங்கர் மற்றும் சேத்துப்பட்டில் இடியுடன் கூடிய கன மழை கொட்டியது. இதில் 2 பேர் பலியாயினர்.

அந்தமான் அருகே வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதற்கேற்ப நேற்று வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காலை  முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதையடுத்து மாலையில் இரண்டு மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, தொரப்பாடி, அரியூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மாலை 3.30

மணி முதல் 5.30 மணி வரை லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்தது. திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் பகுதிகளில் மாலை 6 மணிக்கு மேல் லேசான மழை பெய்தது. சோளிங்கரில் மாலை 3 மணிக்கு மேல் சுமார் 2 மணி நேரம் இடியுடன் கூடிய பலத்த மழை வெளுத்து வாங்கியது. அதேபோல் அரக்கோணம், ஆற்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம் பகுதிகளில் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை மிதமானது முதல் பலத்த மழை வரை பெய்தது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியில் மாலை 3 மணிக்கு வானம் இருண்டு சுமார் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது. செய்யாறு மற்றும் வந்தவாசியில் லேசான மழையும், சேத்துப்பட்டு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை இடியுடன் கூடிய பலத்த மழையும் பெய்தது. சேத்துப்பட்டு அடுத்த ராஜம்மாபுரத்தில் இந்திரபாண்டியன்(22), இவரது தாய் சுந்தரி ஆகிய 2 பேர் இடித்தாக்கி சம்பவ இடத்திலேயே உடல் கருகி இறந்தனர். போளூர் மற்றும் திருவண்ணாமலையில் லேசான மழை பெய்தது. அந்தமான் அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மழை தொடரும் என்பதால் இரண்டு மாவட்டங்களிலும் நிலக்கடலை, மஞ்சள், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அமராவதி பாசனத்தில் 2ம் போக நெல் சாகுபடி சந்தேகம்**

உடுமலை,: அமராவதி அணை பாசனத்தில் 2ம் போக நெல் பயிரிட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் நெல்சாகுபடி கேள்விக்குறியாக இருக்கிறது. உடுமலை அமராவதி அணையின் மூலம் 6500 ஏக்கரில் நெல்சாகுபடி நடக்கிறது. கல்லாபுரம்,ராமகுளம்,குமரலிங்கம், சர்க்கார்கண்ணாடிப்புத்தூர்,« சாழமாதேவி, கணியூர்,காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் நெல் சாகுபடி நடக்கிறது. போதிய மழை பெய்து அமராவதி அணை நிரம்பாததால் கடந்த 2 ஆண்டு கள் விவசாயிகள் பயரிடுவதை தவிர்த்தனர். தென்மேற்கு பருவமழை ஓரளவு பெய்து அணை நிரம்பியதால் கடந்த ஜூன் மாதம் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. அதனால் விவசாயிகள் நெல்சாகுடி செய்தனர். தற்போது அறுவடை நடந்து

கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலேயே 2ம் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி விடுவார்கள். ஆனால் வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்ய வில்லை இதனால் அணைக்கு நீர்வரத்தில்லை. இருப்பதோ 37 அடி தண்ணீர்தான் உள்ளது. இதைக்கொண்டு நெல் பயிரிட விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். வடகிழக்கு பருவமழை தீவிரம் காட்டவில்லை என்றால் இங்கு 2ம் போக சாகுபடி சந்தேகம்தான் என விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

**வடகிழக்கு பருவமழை போதிய அளவில் இல்லை பவானிசாகர் நீர்மட்டம் சரிவு**

ஈரோடு, : வடகிழக்கு பருவ மழை போதிய அளவு பெய்யாததால் நீர்வரத்து குறைந்து பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சரிந்து வருகிறது. இதனால் தொடர்ந்து பாசனத்துக்கு தண்ணீர் வினியோகிப்பத்தில் சிக்கல் ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

பவானிசாகர் அணை யின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், கேரளாவிலும் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவிற்கு வடகிழக்கு பருவமழை பெய்யவில்லை. ஏற்கனவே தென்மேற்கு பருவமழையால் அணை நிரம்பாமல் போனது விவசாயிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்சமயம் வடகிழக்கு பருவமழையும் மிக குறைந்தளவிற்கே பெய்கிறது. கடந்த 4 ஆண்டுக ளில் ஒருமுறை கூட பவானிசாகர் அணை நிரம்பவில்லை. அதிலும் கடந்த ஆண்டு கடும் வறட்சியால் விவசாயப்பணிகள் ஈரோடு மாவட்டத்தில் கடும் பாதிப்படைந்தன. இந்த ஆண்டு ஜுன் மாதத்தில் 28 அடியாக இருந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் (கொள்ளளவு 105 அடி) தென்மேற்கு பருவமழையால் செப்டம்பர் இறுதியில் 85 அடி வரை உயர்ந்தது. இருப்பினும் அணையின் நீர்மட்டம் ஒருமுறை கூட நிரம்பாத நிலையில் தற்போது வடகிழக்கு பருவமழையும் ஏமாற்றி வருவதால் இம்முறை யும் அணை நிரம்புமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் வழக்கமாக நவம்பர் இறுதியில் வடகிழக்கு பருவமழை உச்சத்தை அடையும். இம்மாதம் பெய்யும் மழையை கொண்டே அடுத்து வரும் கீழ்பவானி பாசனப்பகுதிகளின் புன்செய் பாசனத்துக்கும், கொடிவேரி பாசனம் மற்றும் காலிங்கராயன் பாசனத்துக்கும் தண்ணீர் திறப்பது உறுதி செய்யப்படும்.

தற்போது அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை கண்ணாமூச்சி ஆடி வருவதால் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து விட்டது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 66.95 அடியாக இருந்தது. அணைக்கு 1601 கனஅடி வீதம் நீர்வரத்து உள்ளது. அதேசமயம் ஆற்றின் வழியே 400 கனஅடியும், கீழ்பவானி பாசனத்துக்கு 1800 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நீர்வரத்து குறைந்து வரும் நிலையில் தற்போது அணையில் 9.7 டிஎம்சி., மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இந்த நீர்இருப்பையும், இனிவரும் நீர்வரத்தையும் கொண்டு தான் எதிர்வரும் கீழ்பவானி பாசனத்தின் புன்செய் பாசனத்துக்கு 12 டிஎம்சி., நீரும்,

பவானிசாகர் அணையிலிருந்து எல்பீபி வாய்க்காலில் நன்செய்பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து தற்போது 67.26 அடியாக உள்ளது.

**லெகர் புயல் நாளை மறுநாள் ஆந்திராவில் கரை கடக்கும்**



வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள ‘லெகர்’ புயல் மேலும் தீவிரம் அடைந்து கடும் புயலாக மாறும் வாய்ப்புள்ளது. இது நாளை மறுநாள் ஆந்திராவில் கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்தமான் அருகே 22ம் தேதி உருவான காற்றழுத்தம் தற்போது புயலாக மாறியுள்ளது. அது போர்ட் பிளேருக்கு வடக்கே 100 கிமீ தொலைவில் உள்ளது.

மசூலிப்பட்டினத்துக்கு 1000 கிமீ தொலைவிலும், காக்கிநாடாவுக்கு 900 கிமீ தொலைவிலும், கலிங்கப்பட்டினத்துக்கு 1000 கிமீ தொலைவிலும், லெகர் புயல்

நிலை கொண்டுள்ளது.

இந்த புயல் மணிக்கு 75 முதல் 90 கிமீ வேகத்தில் வடக்கு மற்றும் வட மேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இன்று அது கடும் புயலாக மாறும் வாய்ப்புள்ளது. அது நாளை மறுநாள் காலை ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே கரையைக் கடக்கும் என்று எதிபார்க்கப்படுகிறது. புயல் கரையை கடக்கும் போது மணிக்கு 160 கிமீ வேகத்தில் சூறைக்காற்றுடன் மழை பெய்யும். அதனால் கடலோரப் பகுதியில் வெள்ளப் பெருக்கும் ஏற்படும் அபாயம் உள்ளது.

பெரிய அளவில் சேதம் ஏற்படும். புயல் காரணமாக தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் மணிக்கு 45 மணி முதல் 55 கிமீ வேகத்தில் காற்று வீசும். மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே வளி மண்டல மேல் அடுக்கில் உள்ள காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் நேற்று பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 60 மிமீ மழை பதிவாகியுள்ளது.

பரங்கிப்பேட்டை, பாம்பன், ராமநாதபுரம், சோளிங்கர் 50 மிமீ, சிதம்பரம், வால்பாறை 40 மிமீ, தரங்கம்பாடி, நாகப்பட்டினம், தென்காசி, கொள்ளிடம், தாமரைப்பாக்கம், கொடவாசல், சீர்காழி, காட்டுமன்னார் கோயில், செங்கோட்டை 30 மிமீ மழை பெய்துள்ளது. இன்றும் தமிழகத்தில் ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும்.

தினத் தந்தி DAILY THANTHI

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.11.2013**

**நடப்பு சந்தை பருவத்தில் காபி ஏற்றுமதி குறையும்**



2013–14 சந்தை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) காபி ஏற்றுமதி சென்ற பருவத்தை காட்டிலும் சரிவடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. காபி உற்பத்தி குறைந்துள்ளது மற்றும் ஏற்றுமதி விலை சரிவடைந்துள்ளதே இதற்கு காரணம் என அமெரிக்க வேளாண்துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.சென்ற சந்தை பருவத்தில் (2012–13) காபி ஏற்றுமதி வரலாறு காணாத அளவிற்கு 52 லட்சம் மூட்டைகளாக உயர்ந்திருந்தது. 1 மூட்டை 60 கிலோ காபி கொட்டைகளை கொண்டது. நடப்பு சந்தை பருவத்தில் காபி ஏற்றுமதி சென்ற பருவத்தை காட்டிலும் 1.05 லட்சம் மூட்டைகள் குறைந்து 51 லட்சம் மூட்டைகளாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.இருப்பினும் ரூபாய் வெளிமதிப்பு சரிவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய காபி கொட்டைகள் மற்றும் காபிகளுக்கு சர்வதேச சந்தையில் தேவைப்பாடு அதிகமாக காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகா போன்ற காபி உற்பத்தி அதிகம் செய்யப்படும் பகுதிகளில் பலத்த மழை காரணமாக உற்பத்தி கடுமையாக பாதிப்பு அடைந்துள்ளது. மொத்த காபி உற்பத்தியில் கர்நாடகத்தின் பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது. நடப்பு ஆண்டில் காபி உற்பத்தி இந்திய காபி வாரியம் மதிப்பிட்டுள்ள அளவைக் காட்டிலும் (57 லட்சம் மூட்டைகள்) சரிவடையும் என அமெரிக்க வேளாண்துறை தெரிவித்துள்ளது.நம் நாட்டில் தேநீர்தான் அதிகளவில் நுகரப்படுகிறது. எனவே உற்பத்தியாகும் காபியில் பெருமளவில் ஏற்றுமதி ஏற்றுமதி செய்கிறது. இத்தாலி, ஜர்மனி, ரஷ்யா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி சந்தைகளாக உள்ளன.

## லெஹர் புயல் தீவிரம் அடைந்து 28-ந் தேதி காக்கிநாடா அருகே கரையை கடக்கும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இன்று மழை பெய்யும்




சென்னை

புயல் ‘லெஹர்’ 28–ந் தேதி மிக தீவிரம் அடைந்து (நாளை மறுநாள்) ஆந்திராவில் காக்கிநாடா அருகே கரையை கடக்கும் என்றும், இன்று தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும் வானிலை மையம் அறிவித்துள்ளது.

### <u>‘லெஹர்’ புயல்</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. சமீபத்தில் உருவான லெஹர் புயல் நேற்று முன்தினம் இரவு அந்தமான் நிலப்பகுதியை கடந்தது. அது மேலும் வலுப்பெற்று தீவிரம் அடைந்துள்ளது.இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

அந்தமான் நிலப்பகுதியை கடந்த 'லெஹர்' புயல், அந்தமானில் இருந்து 130 கிலோ மீட்டர் தூரத்தில் வங்க கடலின் தென்கிழக்கில் உள்ளது. அது மேற்கு நோக்கி மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. அது ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து கிழக்கு தென்கிழக்கில் 1140 கிலோ மீட்டர் தூரத்திலும், கலிங்கப்பட்டினத்தில் இருந்து தென்கிழக்கில் 1,060 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது.

<u>**28–ந் தேதி கரையை கடக்கிறது**</u>

இந்த புயல் மேலும் வலுப்பெற்று மிக தீவிரமான புயலாக மாறுகிறது. அது மேற்கு வடமேற்கில் நகர்ந்து கலிங்கப்பட்டினத்திற்கும், மசூலிப்பட்டினத்திற்கும் இடையே காக்கிநாடா அருகே 28–ந் தேதி பகல் கரையை கடக்கும்.இன்று (செவ்வாய்க்கிழமை) தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் அநேக இடங்களிலும், வடமாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும்.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

<u>**மழை அளவு**</u>

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–வேதாரண்யம் 6 செ.மீ., பூண்டி, பரங்கிப்பேட்டை, பாம்பன், ராமநாதபுரம், சோழிங்கர் தலா 5 செ.மீ., சிதம்பரம், வால்பாறை தலா 4 செ.மீ., தரங்கம்பாடி, நாகப்பட்டினம், தென்காசி, கொள்ளிடம், ஆத்தூர், தாமரைப்பாக்கம், குடவாசல், சீர்காழி, காட்டுமன்னார்கோவில், செங்கோட்டை தலா 3 செ.மீ.,ஸ்ரீமுஷ்ணம், மணமேல்குடி, திருவாரூர், குழித்துறை, சேத்தியாதோப்பு, ஆரணி, திருச்செங்கோடு, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, தேவகோட்டை,

கமுதி, ஏற்காடு, பாண்டவராயர் தலை, சேரன்மகாதேவி, காரைக்கால், குன்னூர், முடுக்கூர் தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது.மேலும் 30–க்கும் மேற்பட்ட இடங்களில் தலா 1 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

**கோமாரி நோயை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கருணாநிதி வலியுறுத்தல்**

சென்னை,-

கோமாரி நோயை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.இதுகுறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**கோமாரி நோய்**கேள்வி:–கோமாரி நோய் காரணமாகப் பாதிக்கப்படும் கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறதே?பதில்:– கடந்த ஒருமாத காலமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இந்தக் கோமாரி நோய் பற்றிய செய்திகள் தொடர்ந்து ஏடுகளிலே வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. கடும் வெப்பத்திற்குப் பின் மழை பெய்யும்போது, உண்டாகும் வைரஸ் கிருமியால் கோமாரி நோய் கால்நடைகளைத் தாக்குகிறதாம்.தண்ணீர், காற்று மூலம் வேகமாகப் பரவும் இந்நோயின் தாக்கம் பத்து நாட்களுக்குப் பின்தான் வெளியிலே தெரியுமாம். நோய் தாக்கிய கால்நடைகளுக்கு தொடக்கத்தில் கால் குளம்புகளில் புண் ஏற்பட்டு, பின் வாய், நாக்கில் தொடருமாம். கோவை, ஈரோடு, நாமக்கல், கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் ஏராளமான கால்நடைகள் இந்தநோய்க்கு உள்ளாகி மடிந்திருக்கின்றனவாம். கோமாரி நோய் காரணமாக மாநிலம் முழுவதிலும் சுமார் ஒரு லட்சம் கால்நடைகள் இறந்திருக்கின்றன. இறந்த கால்நடைகளுக்கான இழப்பீட்டுத் தொகையை அரசு வழங்கிட வேண்டும். மேலும் இந்நோய் பரவவிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

**லஞ்சம்**

கேள்வி:–5 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் ஒருவரைப் பிடித்துக் கொடுத்தவருக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறதே?

பதில்:–பரிதாபத்திற்குரிய கிராம நிர்வாக அலுவலர்களும், மின் இணைப்புக்கொடுக்கும் சாதாரண நிலையில் உள்ளவர்களும் லஞ்சம் வாங்கும்போது பிடிபடுகிறார்கள். ஆனால் லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் லஞ்சம் வாங்குபவர்கள் மட்டும் சுலபத்தில் தப்பித்துக்கொள்கிறார்களே? அவர்கள் மீது யார் நடவடிக்கை எடுப்பது?

கேள்வி:–தமிழ்நாட்டில் மாணவர் வருகை குறைவு எனக்கூறி, ஈராசிரியர் பள்ளிகளை ஓராசிரியர் பள்ளிகளாகவும், ஓராசிரியர் பள்ளிகளை அறவே மூடிவிடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகிறதே?

பதில்:–இதுபற்றி அரசாணை வெளியிட்டால் பெரிய எதிர்ப்பு வரும் என்பதால், அவ்வாறு ஆணையாக வெளியிடாமல் வாய்மொழி உத்தரவின் மூலமாக அரசு செயல்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இதன் காரணமாக அந்தப்பள்ளிகளில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். எனவே அரசு இந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக்கொண்டு, மாணவர்களின் வருகையை அதிகரிக்கச்செய்ய வேண்டும் என்று கிராமப்புறங்களில் உள்ள பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**கரும்பு விவசாயிகளுக்கு ஆதரவு**

கேள்வி:–இந்தியத்தலைநகரில், கரும்பு விவசாயிகளின் பேரணியும், ஆர்ப்பாட்டமும் டிசம்பர் 12–ந்தேதி நடத்தவிருப்பதாக செய்தி வந்திருக்கிறதே?

பதில்:–அகில இந்திய கரும்பு விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்கூட்டம் டெல்லியில் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டத்தில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கூட்டத்தில் பல சர்க்கரை ஆலைகள் திறக்கப்பட்டும், கரும்புக்கான விலை இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும், இந்த ஆண்டு கரும்பு உற்பத்தி அதிகமாக இருப்பதால் சர்க்கரை இறக்குமதிக்கு

தடை விதிக்க வேண்டுமென்றும், அப்போதுதான் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைக்கு உரிய விலை கிடைக்குமென்றும் கருத்துத்தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளை முன்வைத்துத்தான் மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக டிசம்பர் 12–ந்தேதி கரும்பு விவசாயிகள் பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்தவிருக்கிறார்கள். கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை தி.மு.க. முழு மனதோடு ஆதரிக்கின்றது.

கேள்வி:–தாமிரபரணி–பச்சையாறு–கருமேனியாறு திட்டப்பணிகளில் இந்த ஆட்சியில் தொய்வு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே?

கேள்வி:–மாநில அளவிலாவது நதி நீர் இணைப்புத் திட்டத்தைத்தொடங்கிட வேண்டும் என்னும் நோக்கில், 20–3–2008 அன்று நம்முடைய பேராசிரியர் நிதி அமைச்சராக இருந்து, சட்டப்பேரவையில் படித்த நிதிநிலை அறிக்கையில், பக்கம் 12–ல், ‘‘தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் ரூ.369 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்’’ என்று அறிவிக்கப்பட்டது.

21–2–2009 அன்று இதற்கான பணிகளும் தொடங்கின. நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள வெள்ளாங்குழியில் இருந்து தூத்துக்குடி மாவட்டம், எம்.எல்.தேரி வரை 73 கி.மீ. தூரத்துக்கு வினாடிக்கு 3200 கனஅடி வீதம் தண்ணீர் செல்லக்கூடிய வெள்ளநீர் கால்வாய் வெட்டப்படுகிறது. இதுவரை வெள்ளாங்குழியிலிருந்து பாளையங்கோட்டை அருகே உள்ள மூலக்கரைப்பட்டி வரை சுமார் 25 கி.மீ. தூரத்துக்கு கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. மொத்தப்பணியும் முடிந்தால், வறண்ட பூமியான திசையன்விளை, சாத்தான்குளம் பகுதிகளில் 50–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும். வெள்ளநீர்க்கால்வாயில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைத் திறந்துவிடும் போது, வழி நெடுகிலும் உள்ள கண்மாய்களில் தண்ணீர் நிரப்பப்படும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். மொத்தம் 57,600 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இந்த திட்டம் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நல்வாழ்வு கருதி

தொடங்கப்பட்ட திட்டம் என்பதை மனதிலே கொண்டு இனியாவது அரசு விரைந்து இத்திட்டத்தை முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட முன்வர வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

**தமிழகத்தில் 7 மாவட்ட விவசாய நிலம் வழியாக எரிவாயு குழாய் அமைக்க ஐகோர்ட்டு அனுமதி: விவசாய பாதுகாப்பு குழுவினர் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய முடிவு**



சென்னை,-

கொச்சியில் இருந்து குட்டநாடு, மங்களூர் வழியாக பெங்களூருக்கு குழாய் வழியாக எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை ரூ.3 ஆயிரம் கோடி செலவில் மத்திய அரசு நிறுவனமான 'கெயில்' நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.இந்த திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் ஆகிய 7 மாவட்டங்கள் வழியாக குழாய்கள் பதிக்கும் பணியை கெயில் நிறுவனம் செய்து வந்தது.

**விவசாயிகள் எதிர்ப்பால் தடை**

இந்த 7 மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களில் எரிவாயு குழாய் பதிக்கப்பட்டதற்கு, விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தை

நடத்தினர்.இதனை அடுத்து விவசாயிகளை அழைத்து கருத்து கேட்கும் கூட்டத்தை கடந்த 2012–ம் ஆண்டு மார்ச் மாதம் தமிழக அரசு நடத்தியது. இதன் பின்னர், விவசாயிகளின் தரப்பில் நியாயம் இருப்பதை அறிந்து, கடந்த ஏப்ரல் மாதம் தமிழக அரசு உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.அதில், 'விவசாய விளைநிலங்கள் வழியாக குழாய்களை பதிப்பதை கெயில் நிறுவனம் கைவிடவேண்டும். அதற்கு பதில் தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி குழாய்களை பதிக்க வேண்டும். விளை நிலங்களில் பதிக்கப்பட்ட குழாய்களை அகற்ற வேண்டும். இதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும்' என்று உத்தரவிட்டது.

**<u>உத்தரவை எதிர்த்து வழக்கு</u>**

இதையடுத்து, தமிழக அரசு பிறப்பித்த இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில் கெயில் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை தலைமை நீதிபதி ராஜேஷ் குமார் அக்ரவால், நீதிபதி எம்.சத்தியநாராயணன் ஆகியோர் விசாரித்தனர்.அப்போது, தமிழக அரசு சார்பில் அட்வகேட் ஜெனரல் ஏ.எல்.சோமயாஜி, கெயில் நிறுவனம் சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பி.வில்சன், மத்திய அரசு சார்பில் வக்கீல் கனகராஜ் உள்பட பலர் ஆஜராகி வாதம் செய்தனர்.இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் தமிழக அரசின் தடை உத்தரவை ரத்து செய்து தீர்ப்பு கூறினார்கள். அந்த தீர்ப்பில் கூறியிருப்பதாவது:–

**<u>தொலைநோக்கு திட்டம்</u>**

மாநிலத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கெயில் நிறுவனம் மேற்கொள்ளும் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்துக்கு, தமிழக அரசு முதலில் தன்னுடைய முழு ஆதரவையும் வழங்கியுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்த, உயர் அதிகாரிகளை கொண்ட உயர்மட்ட கமிட்டியை அமைத்துள்ளது.தமிழக அரசின், 'தொலைநோக்கு திட்டம்–2023' என்ற ஆவணப்படங்களில் ரூ.20 ஆயிரம் கோடி

செலவில் அனைத்து மாவட்டங்களிலும் எரிவாயு கிரீடுகளை அமைக்க திட்டம் வகுத்துள்ளது.

**தமிழக அரசின் முடிவு சரியே...**

எனவே, இந்த திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு ஆர்வம் காட்டியுள்ளது நன்றாக தெரிகிறது. இந்த திட்டத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள பல மின் உற்பத்தி நிலையங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் எரிவாயு விநியோகம் செய்யப்படும் நிலையில், மாநிலத்தின் தொழில் துறையும் வளர்ச்சி பெறும். மேலும் இந்த திட்டத்தால் மக்களுக்கும் பல பயன்கள் கிடைக்கும்.இந்த வழக்கில், மக்களின் விருப்பத்தை கேட்டு தமிழக அரசு எடுத்துள்ள முடிவு சரிதான். அதே நேரம், பெரும்பான்மையான மக்களின் நலனுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, தமிழக அரசு முடிவு எடுக்க வேண்டும்.

**முதல் திட்டம் அல்ல**

தமிழகத்தில், எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் ஏற்கனவே மேற்கொள்ளப்படுகிறது. காவிரி டெல்டா மாவட்டத்தில், இயற்கை எரிவாயு எடுக்கும் பணிக்காக 200 கிலோ மீட்டருக்கு மேல் எரிவாயு குழாய் அமைக்கப்பட்டுள்ளது.மேலும், எரிவாயு தொழில் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில், இது மாசு குறைவான பசுமையான திட்டம் என்று கூறப்பட்டு உள்ளது. என்றாலும் இந்த திட்டத்தை எதிர்த்து போராடும் மக்களை சமாதானம் செய்யும் நிலையில் தமிழக அரசு உள்ளது.

**நீதிபதிகள் மறுப்பு**

இருப்பினும் தமிழகத்தில் உள்ள 7 மாவட்டங்களில் எரிவாயு குழாய்களை விவசாய நிலத்தில் பதிக்கக்கூடாது என்று தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்கிறோம்.இவ்வாறு நீதிபதிகள் கூறியுள்ளனர்.

**சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல்**

இந்த தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதும், கோவை உள்ளிட்ட 7 மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளின் சார்பில் மூத்த வக்கீல் ஹேமா சம்பத் ஆஜராகி, 'இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய உள்ளதால், தீர்ப்பை ஒரு மாத காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டும்' என்று கோரிக்கைவிடுத்தார். ஆனால், இவரது கோரிக்கையை நீதிபதிகள் ஏற்க மறுத்துவிட்டனர்.விவசாய சங்க நிர்வாகிகளும் சென்னை ஐகோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்தனர். இது தொடர்பாக விவசாயிகள் பாதுகாப்பு தலைவர் நாகராஜன் கூறும்போது, தமிழக விவசாயிகளுக்கு எதிராக ஐகோர்ட்டு தீர்ப்பு அமைந்து இருக்கிறது. இந்த தீர்ப்பு பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. இந்த தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்து இருப்பதாக தெரிவித்தார்.

பலத்த மழை காரணமாக மேட்டுப்பாளையம்–ஊட்டி மலை ரெயில் பாதையில் நிலச்சரிவு

கோவை: மேட்டுப்பாளையம் பகுதியில் பலத்த மழை காரணமாக ஊட்டி மலை ரெயில் பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக மலை ரெயில் நாளை மறுநாள் (செவ்வாய்கிழமை) வரை ரத்து செய்யப்பட்டுள்ளது.

பலத்த மழையால் நிலச்சரிவு

கோவை, நீலகிரி மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழை காரணமாக அணைகளில் நீர்மட்டம் கிடுகிடு என உயர்ந்தும், ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டும் ஓடுகிறது. இந்த நிலையில்

மேட்டுப்பாளையம், கல்லார், பர்லியார், குன்னூர் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் நேற்று இரவு இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

இந்த மழை காரணமாக மேட்டுப்பாளையம்–ஊட்டி மலை ரெயில் பாதையில் கல்லார்–ரன்னிமேடு ரெயில் நிலையங்களுக்கு இடையே ரெயில் பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டு பாறைகள் உருண்டு விழுந்தன. மண் சரிந்து ரெயில் பாதையை மூடியது. கல்லார்–ரன்னிமேடு ரெயில் நிலையங்கள் இடையே 3 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் கல்லார் அடர்லி இடையே 25–ம் எண் பாலம் அருகே பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

<u>மலை ரெயில் நிறுத்தம்</u>

இந்த நிலையில் காலை வழக்கம் போல் காலை 7.10 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு மலை ரெயில் புறப்பட்டு சென்றது. ரெயிலில் 150–க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பயணம் செய்தனர். காலை 8.20 மணிக்கு மலை ரெயில் கல்லார்–அடர்லி ரெயில் நிலையம் இடையே சென்று கொண்டிருந்தபோது மலைப்பாதையில் ஏற்பட்ட நிலச்சரிவு தெரியவந்ததும் மலை ரெயில் பாதி வழியில் நிறுத்தப்பட்டது.

பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டதால் குன்னூருக்கு ரெயில் இயக்கப்படாமல் மீண்டும் அங்கிருந்து காலை 9.45 மணிக்கு மலை ரெயில் புறப்பட்டு மேட்டுப்பாளையம் ரெயில் நிலையத்திற்கு காலை 10.25 மணிக்கு வந்து சேர்ந்தது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

<u>ரத்து</u>

இதுகுறித்து ரெயில்வே உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து ரெயில் பாதையில் விழுந்து கிடந்த பாறைகளை வெடி வைத்து தகர்த்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த பணிகள் இன்னும் 2 அல்லது 3 நாட்கள் நீடிக்கும் என்று தெரிகிறது. இதன் காரணமாக மேட்டுப்பாளையம்–ஊட்டி இடையே மலை ரெயில் போக்குவரத்தை

நாளை (செவ்வாய்க்கிழமை) வரை சேலம் ரெயில்வே கோட்ட நிர்வாகம் ரத்து செய்து உள்ளது.

9 இடங்களில் மண் சரிவு

மழை காரணமாக கோத்தகிரி–மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள குஞ்சப்பனை, மாமரம், கூவக்கரை, சுங்கச்சாவடி உள்ளிட்ட 9 இடங்களில் லேசான அளவில் மண் சரிவு ஏற்பட்டது. இதனால் அந்த பகுதிகளில் வாகன போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து தகவல் அறிந்த நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

பின்னர் பொக்லைன் எந்திரம் மூலம் சாலை பணியாளர்களைக்கொண்டு சுமார் 6 மணி நேரம் போராடி சாலையில் விழுந்த மண், மரங்கள் மற்றும் சிறிய அளவிலான பாறைகளை அகற்றினார்கள். இதனால் கோத்தகிரி–மேட்டுப்பாளையம் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இருளில் மூழ்கிய கிராமங்கள்

கோத்தகிரி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக தேயிலை தோட்டங்கள் மற்றும் குடியிருப்பு பகுதியில் இருந்த 10–க்கும் மேற்பட்ட மரங்கள் சாய்ந்து விழுந்தன. மேலும் குடியிருப்பு பகுதியில் இருந்த மின் கம்பியில் மரக்கிளைகள் விழுந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு கோத்தகிரியில் உள்ள 20–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருளில் மூழ்கின. கோத்தகிரியில் 17 மணி நேரத்திற்கும் மேலாக மின் தடை ஏற்பட்டது.

ராட்சத மரங்கள் சாயந்தன

குன்னூர்–கோத்தகிரி சாலையில் ஹைபீல்டு குடியிருப்பு பகுதியில் பழமை வாய்ந்த ராட்சத கற்பூர மரங்கள் அதிகளவில் உள்ளன. நேற்று இரவு பெய்த தொடர் மழை

காரணமாக ஹைபீல்டு பகுதியில் இருந்த 4 ராட்சத மரங்கள் அடுத்தடுத்து சாய்ந்தன.

இதனால் அந்த பகுதியில் 7 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தஞ்சாவூர்

தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. தஞ்சையில் காலை 6 மணி முதல் 7 மணி வரை பலத்த மழை கொட்டியது. அதன் காரணமாக தஞ்சை மேரீஸ்கார்னர் பகுதியில் உள்ள ரெயில்வே கீழ்பாலத்தில் தண்ணீர் தேங்கியதால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தஞ்சை மேலவீதியில் உள்ள மூலைஅனுமார் கோவிலை சுற்றிலும் சுமார் 2 அடி உயரத்திற்கு தண்ணீர் தேங்கியது.

தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. இதே போல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் சாலைகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி நின்றது.

நாகையில் நேற்று இரவு முதல் பலத்த மழை பெய்தது. ஹெலன் புயல் காரணமாக நாகை துறைமுகத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மேலும் நாகை மாவட்டத்தில் ஆங்காங்கே பலத்த மழை பெய்தது.

கடல் கொந்தளிப்பு

கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் தாழ்வான பகுதியில் மழைவெள்ளம் தேங்கியது. புயல் எச்சரிக்கை காரணமாக கடலூர் துறைமுகத்தில் 2–ம் எண் கூண்டு ஏற்றப்பட்டது. இருப்பினும் கடல் அலை

வழக்கம் போல் இருப்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க சென்று வருகின்றனர். பரங்கிப்பேட்டையில் மட்டும் கடல் கொந்தளிப்பாக இருப்பதால் அப்பகுதி மீனவர்கள் மட்டும் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

சிதம்பரத்தில் பெய்த கன மழையினால் நடராஜர் கோவிலுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மழையில் நனைந்த படி சாமி தரிசனம் செய்து விட்டு சென்றனர். தில்லைக்காளியம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள குளத்தின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. இருப்பினும் யாருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. தொடர்ந்து பெய்து வரும் கன மழையினால் சேத்தியாத்தோப்பு பகுதியில் 10–க்கும் மேற்பட்ட ஆடுகள் மர்ம நோயால் இறந்தன.

<u>தொடர்மழை</u>

குமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. சிலநேரங்களில் கனமழை பொழிந்து வருகிறது. கடந்த சில நாட்களாக பகலில் நன்றாக வெயில் அடித்து, பிற்பகலுக்கு பிறகு மழை பெய்வது வழக்கமாக உள்ளது. நேற்றும் இதே நிலை நீடித்தது.

மாவட்டத்தில் அதிபட்சமாக திருவட்டாரில் 112 மில்லி மீட்டர் அதாவது 11.2 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

மழை காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு நேற்று 190 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 322 கனஅடி தண்ணீரும், சிற்றார் (1) அணைக்கு 97 கனஅடி தண்ணீரும், சிற்றார் (2) அணைக்கு 148 கனஅடி தண்ணீரும் வந்தது. வெளியேற்றமாக பெருஞ்சாணி அணையில் இருந்து மட்டும் 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திருவட்டார் பகுதியில் பெய்த கனமழை காரணமாக பரளியாறு மற்றும் தாமிரபரணி ஆறுகளில் அதிகளவு வெள்ளம் ஓடியது. குமரி குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டியது.

விடுமுறைநாளையொட்டி நேற்று சுற்றுலா பயணிகள் வருகை தந்திருந்தனர். ஆனால் தண்ணீர் அதிகமாக விழுந்ததால் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தூத்துக்குடியில் அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை பலத்த மழை பெய்தது. மழை காரணமாக தூத்துக்குடியில் தாழ்வான பகுதிகளில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியது.

இந்த நிலையில், தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் நேற்று இரவு நெல்லை, நாங்குநேரி, சிவகிரி, தென்காசி, ஆயக்குடி, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்தது. பல இடங்களில் அதிக அளவு மழை பதிவாகி உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் காலை ஒரு சில இடங்களில் மழை பெய்தது. அதன் பிறகு மழை இல்லை. ஆனால் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் குளிர்ந்த காற்று வீசியது.

ராமநாதபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. ராமேசுவரத்தில் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது. புதுச்சேரி துறைமுகத்திலும் 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது.

மின்னல் தாக்கி தாய்–மகன் பலி

வேலூரில் காலை முதல் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 4.30 மணி முதல் லேசான தூறல் மழை பெய்து வருகிறது.

திருவண்ணாமலையிலும் காலை முதல் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது லேசான தூறல் பெய்தது. சேத்துப்பட்டு அருகே மின்னல் தாக்கி தாய்–மகன் பலியானார்கள்.

**ராமியம்பட்டியில் இலவச கால்நடை சிகிச்சை முகாம்**



பொம்மிடி,-

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் ராமியம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் ஆவின் பால் நிறுவனம் சார்பில் இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு ஆவின் ஒன்றிய பொது மேலாளர் கொம்பையன் தலைமை தாங்கினார். தர்மபுரி துணை பதிவாளர் முனிராஜ், கால்நடை பராமரிப்பு மண்டல இயக்குனர் இளங்கோவன், சங்க தலைவர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் ராமியம்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் இருந்து கால்நடைகளை பொதுமக்கள் சிகிச்சைக்காக கொண்டு வந்தனர். அவற்றுக்கு சிகிச்சை மற்றும் குடற்புழு நீக்கம் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. அப்போது கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கூட்டுறவு சார்பதிவாளர் ரத்தினவேல், சங்க செயலாளர் நாகராஜன் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

**பெரம்பலூரில் முள்காடுகளாக மாறிவரும் ஏரிகள் தூர்வாரி சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை**



பெரம்பலூர், -

பெரம்பலூரில் முள்காடுகளாக மாறி வரும் பெரிய ஏரி உள்ளிட்ட 4 பாசன ஏரிகளை தூர்வாரி சீரமைத்து ஆழப்படுத்திடுமாறு பொதுப் பணித்துறைக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>பெரிய ஏரி</u>

பெரம்பலூரில் துறையூர் சாலையில் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி அருகே பெரிய ஏரி உள்ளது. கோனேரி ஆற்றில் இருந்து ஜார்ஜ் வாய்க்கால் வழியாகவும், அரணாரை செல்லியம்மன், நீலியம்மன் ஏரியில் இருந்தும் பெரம்பலூர் பெரிய ஏரி நீர்வரத்தை பெறுகிறது. பழமையான இந்த ஏரிக்கு நீர்வரத்து ஜார்ஜ் வாய்க்கால் தற்போது கழிவு நீர்வெளியேற்று கால்வாயாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

<u>பாசன வசதி பெறும் ஏரிகள்</u>

பெரம்பலூரில் இருந்து 17 கி.மீ. தொலையில்லாடபுரம் அருகே பச்சைமலையில் உச்சியில் உருவாகி செக்காத்தி பாறை ஆனைக்கட்டி அருவியில் இருந்து வரும் மழை வெள்ளநீரால்லாடபுரம், அம்மாபாளையம், ஈச்சம்பட்டி, குரும்பலூர், செஞ்சேரி, அரணாரை நீலியம்மன் செல்லியம்மன் ஏரி, பெரம்பலூரில் உள்ள பெரிய, சிறிய ஏரிகள் துறைமங்கலம் ஏரி மற்றும் கவுல்பாளையம் ஏரி ஆகிய

ஏரிகள் பாசன வசதி பெறுகிறது. பெரம்பலூரை அடுத்த எளம்பலூர் உள்ளிட்ட கிராமப் புறங்களில் உள்ள ஏரிகள் மகாத்மா காந்தி கிராம வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ்தூர் வாரி சீரமைக்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு இல்லை**

பெரம்பலூர் நகராட்சி பகுதியில் இந்த திட்டத்தை செயல்படுத்த வழியில்லாத நிலையில் உள்ள பெரியஏரி, வெள்ளந்தாங்கி அம்மன் ஏரி, (சிறிய ஏரி) அரணாரை, மற்றும் துறைமங்கலத்தில் உள்ள ஏரிகள் தூர்வாரி சீரமைக்கப்படாமல் உள்ளது. இதற்கென்று பொதுப் பணித்துறையினர் சமீபத்தில் நிதிஒதுக்கீடு செய்யவில்லை. பெரம்பலூர் பெரிய ஏரி முட்புதர்கள் அடர்ந்து காணப்படுகிறது. மேலும் ஏரியில் இருந்து உபரிநீர் வெளியேறும் பகுதியில் உள்ள மதகுப்பகுதியும் முட்புதர்கள் படர்ந்து காடு, மேடாக கிடக்கிறது.

**சீரமைக்க கோரிக்கை**

இந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யத்தவறியதால், பெரம்பலூர் பெரிய ஏரி, சிறிய ஏரி, துறைமங்கலம் ஏரி, நீலி யம்மன் ஏரி ஆகியவற்றில் உள்ள முட்செடிகள், நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை அகற்றி, தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்றும், மழைக்காலத்தில் சிறிதளவு நீர் தேங்கி நின்றாலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திடவும், பாசனத்திற்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்த விவசாயிகள், போர்க்கால அடிப்படையில் பெரம்பலூரில் உள்ள ஏரிகளை தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்று மாவட்ட கலெக்டருக்கும், பொதுப்பணித்துறையினருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகோள்

இலுப்பூர்,

மழையின்றி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு நிவா ரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட் டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள்ளது.

**<u>மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட்டம்</u>**

அன்னவாசலில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ஒன்றியக்குழு கூட்டம், லெட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சின்னத்துரை, மாநிலக்குழு முடிவுகளை பற்றி பேசினார். இதில் மாவட்ட செய்குழு உறுப்பினர் சண்முகம், ஒன்றிய செயலாளர் சுப்பையா, கட்சி நிர்வாகிகள் கிருஷ்ணன், கருப் பையா, ராமையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு;-

**<u>நிவாரணம்:</u>** வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் வான்மழையை நம்பியிருந்த விவசாயிகள் பெருத்த ஏமாற்றம் அடைந் தனர். இனி மழை பெய்யும் என்ற நிலையும் நம்ப முடியாத தால், விவசாயிகள் விவசாய தொழிலை கைவிட வேண் டும் என்ற பேச்சு அதிகரித்து விட்டது. பெரும்பாலான சாகுபடி நிலங்கள் காய்ந்து கிடக்கின்றன.மேட்டூர் நீர் இல்லாததால் நிலத்தடி நீர் குறைந்து போர் குழாய் தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இத்தகைய பாதிப்பில் உள்ள விவ சாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக் கை எடுக்க வேண்டும்.

மழைக்காலத்தில் விரய மாகும் தண்ணீரை சேமிக்கும் வைகை, குண்டாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி, அன்னவாசல் ஒன்றியத்தில் உள்ள அனைத்து கண்மாயில் தண்ணீர் நிரப்பிடவும், விவசாயத்தை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**<u>ஆர்ப்பாட்டம்</u>**

சிறு, குறு தொழில் வளர்ச்சி ஏற்பட தோழமையுடன் காப்பீடு வங்கியில் கடன் கொடுத்து சிறுதொழிலை பாதுகாத்திட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறை

வேற்றப்பட்டன. மேலும் தீர்மானத்தை விளக்கி டிசம்பர் 16-ல் இலுப்பூர் சின்னக்கடை வீதியில் ஆர்ப்பாட்டம் நடத் துவது என்றும் முடிவு செய் யப்பட்டது.

**கோமாரி நோய் தாக்குதலா? கால்நடைகளை கண்காணிக்க 5 குழுக்கள் அமைப்பு கலெக்டர் ம.ரவிகுமார் பேட்டி**



தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளை கண்காணிக்க 5 குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன என்று கலெக்டர் ம.ரவிகுமார் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கூறியதாவது:–

<u>தாக்கம் இல்லை</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கியதாக தகவல்கள் வந்தன. அதன்பேரில் மாவட்டம் முழுவதும் அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் 69 கால்நடை டாக்டர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு ஒரு மாடு இறந்தது. அந்த மாடு கோமாரி நோயால் தாக்கப்படவில்லை. அதற்கு இன்சூரன்சு வழங்கப்பட்டு உள்ளது. மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் எதுவும் இல்லை.

<u>கண்காணிப்பு</u>

மேலும் சென்னையில் இருந்த கால்நடைத்துறை உதவி இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்து வருகின்றனர். வெளிமாவட்டங்களில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்துக்கு கொண்டு வரப்படும் கால்நடைகளை கண்காணிக்க 5 குழு அமைக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து தீவிரமாக கண்காணித்து வருகிறோம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகளில் மக்கள் விரும்பும் மதுபானங்களை வரவழைத்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.

<u>பாராட்டு</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற சிறுபான்மையின மாணவ–மாணவிகளுக்கு பரிசுத் தொகையும், மாநில, மாவட்ட அளவிலான ஸ்கேட்டிங், யோகா உள்ளிட்ட போட்டிகளில் சாதனை படைத்த மாணவ–மாணவிகளுக்கும் கலெக்டர் ம.ரவிகுமார் பரிசு வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து கலந்து கொண்டார்.

**தர்மாபுரி, தப்புக்குண்டு பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் சோளப்பயிர் சாகுபடி பாதிப்பு**



தேனி,

தர்மாபுரி, தப்புக்குண்டு போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் சோளம் உள்ளிட்ட பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது.

நீர்மட்டம் குறைந்தது

தேனி மாவட்டம் கோட்டூர் அருகே உள்ள தர்மாபுரி, தப்புக்குண்டு, தாடிச்சேரி போன்ற பகுதிகளில் இரைவை பாசனம் மூலம் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகிறது. நுற்றுக்கணக்கான விவசாயிகள் இப்பகுதிகளில் கிணறுகளில் கிடைக்கும் தண் ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்றனர். காய்கறி கள், பழ வகைகள், கீரைகள், மக்காச்சோளம், வெள்ளைச் சோளம் போன்றவை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அது மட்டும் இன்றி ஏராளமான விவசாயிகள் பூக்கள் சாகுபடி யிலும் ஈடுபட்டு உள்ளனர்.

தேனி மாவட்டத்தில் காய் கறி உற்பத்தியில் இப்பகுதிகள் தவிர்க்க முடியாத பகுதியாக விளங்கி வருகின்றன. கடந்த ஆண்டு போல் இந்த ஆண்டும் பருவமழை ஏமாற்றி வருகிறது. கடந்த ஆண்டு பருவமழை பெய்த்ததால் அணைக்கட்டு கள், ஆறுகள், குளங்கள் வறட்சியில் சிக்கியது போல் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்துவிட்டது. இதனால் கிணறுகளில் தண்ணீர் இருப்பு குறைந்தது. இந்த ஆண்டும் வறட்சி நீடிப்பதால் கிணறுகளில் மிகவும் குறைந்த அளவிலேயே நீர் சுரக்கிறது.

சோளப்பயிர்கள் பாதிப்பு

24 மணி நேரமும் கிணறு களில் மோட்டார் இயக்கும் அளவிற்கு தண்ணீர் இருந்த காலம் போய் தற்போது ஒரு நாளைக்கு அரை மணி நேரம் கூட மோட்டார் இயக்க முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு வறட்சி நீடித்ததால் இந்த ஆண்டு இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் வறட்சியை தாக்கும் என்ற நம்பிக்கையில் சோளப் பயிர்கள் சாகுபடி செய்து இருந்தனர். ஆனால் இந்த ஆண்டும் வறட்சி நீடிப்பதால் சோளப்பயிர்கள் விளைச்சல் பெறாமல் உள் ளது.

இப்பகுதிகளில் நடவு செய்து 2½ மாதங்கள் ஆன சோளப் பயிர் சுமார் 2 அடி உயரத்திற்கு கூட வளராமல் உள்ளது. சில தோட்டங்களில் செடிகள் சிறிய அளவில் முளைத்த பின்னர் அப்படியே கருகியுள்ளன. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**பரமக்குடி பகுதியில் மான்கள் கூட்டம் சரணாலயம் அமைக்க வேண்டுகோள்**



மான்கள் வசிப்பதாக கூறப்படும் காட்டுப்பகுதியை படத்தில் காணலாம்.

பரமக்குடி,

பரமக்குடி அருகே உள்ள கிராம பகுதிகளில் மான்கள் கூட்டமாக வாழ்கின்றன. எனவே சரணாலயம் அமைக்க வேண் டும் என்று பொது மக்கள் வலியுறுத்தி உள் ளனர்.

மான்கள்

பரமக்குடி ஊராட்சிக்கு உட் பட்டது வளையனேந்தல் கிராமம். இதன் அருகில் பச்சைப்பசேல் என செடி களும், கொடிகளும், மரங் களும் அடர்ந்து காணப்படு கிறது. இந்த பகுதியை சுற்றி லும் தோப்புகளும், ஓடை போன்ற கால்வாய்களும் உள் ளன. பெரும் பாலும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதி யாக இருப்பதால் ஆடு, மாடு மேய்ப்பவர்கள் நடந்து சென்ற ஒத்தையடி பாதை மட்டும் காணப்படும்.

இந்த பகுதியில் தான் மான்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. மேய்ச்சலுக்காக செல்லும் ஆடு, மாடுகளுடன் சேர்ந்து மான்களும் இரை தேடுவது கண் கொள்ளாக் காட்சியாகும். இதனை எப் போதாவது தான் பார்க்க முடியும் என்று அப்பகுதி மக்களும், ஆடு -மாடு மேய்ப் பவர்களும் கூறுகின்றனர்.

சரணாலயம்

சில நேரங்களில் அந்த மான் கள் இரை தேடி அருகில் உள்ள தோப்புகளுக்குள் நுழைந்து துவம் சம் செய்வதும் வழக்கமாக உள் ளது. அருகி லேயே ஓடைபோல கால்வாய் உள்ளதால் அதில் கிடக்கும் தண்ணீரை அருந்திச் செல் கின்றன. குறிப்பாக இந்த பகுதியில் புள்ளி மான்கள் அதிகம் உள்ளதாக கூறப்படு கிறது. சமீபத்தில் கூட இரை தேடி வந்த ஒரு புள்ளி மான் பஸ்சிலும், இதேபோல மற் றொரு மான் ரெயிலும் அடி பட்டு இறந்து போனது குறிப் பிடத்தக்கது.